பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | வைகாசி 24 வியாழக்கிழமை 07.06.2018 | கதிர் 213

### இனி து ரகசியம் அல்ல!

'செல்லும், செல்லாதது எல்லாவற்றுக்குச் செட்டியாரே பொறுப்பு' என்ற கூற்று மாதிரி, கூட்டமைப்பில் பல விடயங்களுக்கும் சுமந்திரன் மீது குற்றத்தைச் சுமத்தி வரும் சக எம்.பிக்களுக்கு கடந்த செவ்வாயன்று ஆச்சரியம் காத்திருந்தது.

பக்கம் 03 »

# வடக்கு முதலமைச்சராக மாவை எம்.பி. விருப்பம்

## கடந்த முறை இழைத்த பெரும் தவறை இம்முறையும் விடத் தயாரில்லையாம்




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 06

வடக்கு மாகாண சபையின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்குத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர் கூட்டத்தில் விருப்பம் தெரிவித்துள்ளார்.

பக்கம் 03 »



தென்மராட்சி வடவரணிப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் கனரக வாகனம் பயன்படுத்தப்பட்டுத் தேர் இழுக்கப்பட்டது. பிணக்கு ஒன்றின் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டதாகத் தெரிய வந்தது. (ஐ - 7)

## தேர்தல் பின்னடைவிலிருந்து மீள்வதற்கு ஒற்றுமையே வழி

### கூட்டமைப்பின் தலைவர்கள் கூட்டத்தில் நேற்று வலியுறுத்தல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 07

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தேர்தல் பின்னடைவுகள் ஏற்பட்டிருக்கும் நிலையில் கூட்டமைப் பினராக ஒன்றாக இணைந்து ஒற்றுமையாக பயணிக்கவேண்டுமெனக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் கூட்

பக்கம் 14 »

## வடக்கு கல்வியமைச்சு முன்பாக ஆசிரியர்கள் நேற்று கவனவீர்ப்பு

### ஆசிரியையின் உயிரிழப்புக்கு நீதி கோரி



யாழ்ப்பாணம், ஜூன் 07

ஒஸ்மானியாக் கல்லூரி அதிபரின் தொந்தரவு காரணமாகக் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை ஒருவர் உயிரிழந்தார் எனக்

பக்கம் 03 »

## போலிக் கிராம சேவையாளர் யாழ்.கச்சேரியடியில் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 07

கிராம அலுவலகர் எனத் தெரிவித்து ஏமாற்ற முயன்றவர் பொது மக்களால் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு அருகாமையில் நேற்றுப் பிற்பகல்

பக்கம் 14 »

## பல்கலைகளில் பகிடிவதையை கட்டுப்படுத்த கைபேசிச் செயலி



கொழும்பு, ஜூன் 07

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதையை கட்டுப்படுத்துவதற்காக அதிதிறன் கைபேசி (ஸ்மாட் போன்) செயலியைப்

பக்கம் 03 »

## வடக்குக் கல்வி அமைச்சரை விசாரிக்க அழைத்தது ரி.ஐ.டி.

யாழ்ப்பாணம், ஜூன் 07

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், பயங்கரவாத விசார

பக்கம் 14 »

## தெற்கு மீனவரை அகற்றும் வழி எப்படியென்று எமக்கு தெரியும்

### மருதங்கேணி மீனவர்கள் காட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 07

வடமராட்சி கிழக்கில் அடாத்தாகத் தங்கியுள்ள தென்பகுதி மீனவர்களை வெளியேற்றத் தமிழ் அரசியல்வாதிகளால் இயலாவிட்டால் அதனை அவர்கள் பகிரங்கமாகக் கூற வேண்டும். அதன் பின்

பக்கம் 14 »

## பல்கலை மாணவர் படுகொலை; 3 பொலிஸார் விடுதலையாவர்



யாழ்ப்பாணம், ஜூன் 07

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 5 பொலிஸ் உத்தியோகத்தர்களில் மூவரை விடுவிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம், குற்றப்புலனாய்வுப்

பக்கம் 14 »

## யாழ்ப்பாணம் உட்பட 13 மாவட்டங்களில் பலமான காற்று வீசும்

கொழும்பு, ஜூன் 07

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் உட்பட நாட்டின் 13 மாவட்டங்களில் காற்றின் வேகம் மணிக்கு 60 - 70 கிலோ மீற்றர்

பக்கம் 14 »

## தெற்கு மீனவர் இன்று வெளியேறாவிடின் மீன்பிடித் திணைக்களம் நாளை முற்றுகை

### வடமராட்சி கிழக்கு மீனவர்கள் நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 07

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணிப் பகுதியில் தென்னிலங்கை மீனவர்களை இன்று வியாழக்கிழமைக்குள் வெளியேறாவிட்டால் நாளை வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் முற்றுகையிடப்படும்.

- இவ்வாறு கடுமையான தொனியில் தெரிவித்துள்ளனர் வடமராட்சி கிழக்கு மீனவர்கள்.

அங்கு தெற்கு மீனவர்களால் மேற்கொள்ளப்

பக்கம் 14 »

# மருதங்கேணிப் பகுதியை சாராதவர்களால் மேற்கொள்ளும் கடற்றொழிலுக்கு சட்ட ரீதியிலான அனுமதிகள் உண்டா?

கொழும்பு, ஜூன் 07

மருதங்கேணி பகுதியில் அப்பகுதி சாராதவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கடற்றொழில் முயற்சிகளுக்கு சட்ட ரீதியிலான அனுமதிகள்ஏதும்வழங்கப்பட்டுள்ளனவா? அவ்வாறு வழங்கப்பட்டுள்ளன எனில், அவை எந்த ரீதியில் வழங்கப்பட்டுள்ளன? என கடற்றொழில், நீரியல் வளம் மற்றும் கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சர் விஜித் விஜயமுனி டி சொய்சாவிடம் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றைய தினம் நடைபெற்ற கேள்வி நேரத்தின்போதே இவ்வாறு கேள்வி எழுப் பியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியில் அங்குள்ள மக்களின் காணிகளில் பலவந்தமாக வாடிகளை அமைத்து, அப்பகுதியைச் சாராத சுமார் 1500 வரையிலான மக்கள் சட்ட விரோதமான முறையில் கடலட்டை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால், தமது வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் சுற்றுச் சூழல் மற்றும் கடல் வளங்கள் பாதிப்படைகின்றன என்றும் தெரிவித்து மருதங்கேணி வாழ் கடற்றொழிலாளர்கள் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

மேற்படிசெயற்பாடுகளுக்கு எதிராக ஜனநாயக ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், மேற்படி பிரச்சினையானது, வெறும் தொழில் ரீதியிலான பிரச்சினை மாத்திரமின்றி, இன ரீதியிலான பிரச்சினையாகவும் மாற்றப்பட்டு விடுமோ என்ற




அச்சம் எமது மக்களிடையே ஏற்பட்டு வருவதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

கடந்த கால யுத்தப் பாதிப்புகளில் இருந்து தங்களது வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு எமது மக்கள் பல்வேறு தடைகளை சந்திக்க வேண்டியுள்ள இக்காலகட்டத்தில், இந்திய கடற்றொழிலாளர்களது எல்லை தாண்டியதும், சட்ட விரோதமானதுமான தொழில் செயற்பாடுகளால் பெரிதும் பாதிக்கப்படுகின்ற எமது கடற்றொழிலாளர்களுக்கு, மேற்படி சட்டவிரோத கடற்றொழில்களும் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தி வருவதாகவே முறைப்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன.


அந்தநிலையில், வடமராட்சி கிழக்கு பகுதியில் மேற்படி கடலட்டை பிடிக்கும் தொழில் காரணமாக தற்போது ஏற்பட்டுள்ள அமைதியின்மையான சூழலை அவதானத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

மேலும், மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற கடற்பகுதிகளில்எல்லைமீறிய கடற்றொழிலில்ஈடுபட்டிருந்த நிலையில் பிடிக்கப்பட்ட இந்திய இழுவலைப் படகு களில் 35 இற்கும் மேற்பட்ட படகுகள் கிளிநொச்சி, கிராஞ்சி இலவங்குடா கடற்பகுதியில் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக தொடர்ந்து பல காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், மேற்படி படகுகளிலிருந்து கசிகின்ற எண்ணெய் காரணமாக மேற்படி கடற்பகுதி பாதிக்கப்பட்டுள்ளதால் இங்குள்ள கடற்றொழிலாளர்களால் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், சூழலும் மாசடைந்து வருகின்றது.

எனவே, மேற்படி பிரச்னைகளுக்கு உடனடி நடவடிக்கை எடுக்க முடியுமா? என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி மைத்திரி விமர்சித்தாலும் கூட்டு அரசு தொடரும் என்கிறார் ரணில்



கொழும்பு, ஜூன் 07

ஐக்கிய தேசியக் கட்சியின் மீது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விமர்சனங்களை முன்வைத்தாலும், கூட்டு அரசு அதன் பதவிக் காலத்தை நிறைவு செய்யும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் காலை நடந்த, இப்தார் காலை விருந்து நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் உள்ளன.

ஆனாலும், மக்களின் நலன் கருதி, தற்போதைய அரசு , 2020 ஓகஸ்ட் வரை தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

கூட்டு அரசின் ஏனைய பங்காளிகளுடன் இணைந்து நாம் எமது கடமையை நிறைவு செய்வோம்.

நாடாளுமன்ற, ஜனாதிபதி தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம், முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறைகளுக்கு பொறுப்பானவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் பலரும் பங்கேற்றனர்.

## இலஞ்சம் கொடுத்து வெற்றி ஈட்டிய 'மொட்டு' உறுப்பினருக்கு எதிராக வழக்கு

உள்ளூராட்சித்தேர்தலில் வாக்காளர்களுக்கு இலஞ்சம் கொடுத்தார் என்று, சிறிலங்கா பொதுஜன முன்னணியின் மதுரகெட்டிய உள்ளூராட்சி சபை உறுப்பினர், தரங்க திசநாயக்கவுக்கு எதிராக, தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் வழக்குத் தாக்கல் செய்துள்ளன.

புதிய உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தின் கீழ், வாக்காளர்களுக்கு இலஞ்சம் கொடுத்தனர் எனத் தொடரப்பட்டுள்ள முதல் வழக்கு இது என்று தேர்தல் வன் முறைகளைக் கண்காணிக்கும் மையத்தின் தேசிய இணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த உள்ளூராட்சி உறுப்பினர் கடந்த பெப்ரவரி 10 ஆம் திகதி நடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது, 40கோடி ரூபாவை செலவிட்டார் என்று மொனராகல மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று முக்தினம் முதல்முறையாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மையத்தின் தேசிய இணைப்பாளர் தெரிவித்தவை வருமாறு:-

இது ஒரு முக்கியமான வழக்கு. ஏனென்றால், 1970 களின் தொடக்கத்துக்குப் பின்னர், தேர்தல் சட்டங்களை மீறிய குற்றத்துக்காக எந்தவொரு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியும் தமது பிரதிநிதித்துவத்தை இழக்கவில்லை.

பல வேட்பாளர்கள் தாம் வெற்றி பெற்ற முறைகள் பற்றிப்பொருட்படுத்தாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் பாதுகாப்பாக இருப்பதாக நம்புகின்றனர்.

இதனால் அரசியல்வாதிகள் தைரியமாக உள்ளனர். அவர்கள் தேர்தல் சட்டங்களை மீறிவருகின்றனர்.

இந்தநிலையில், இந்த வழக்கு ஏனைய அரசியல் வாதிகளுக்குஒருதெளிவான செய்தியை கொடுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம் என்றும் அவர் கூறினார்.

இந்த வழக்கை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மையம் மற்றும் பவ்ரல்ஆகியகண்காணிப்பு அமைப்புகள் தாக்கல் செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# ரணில் குடும்ப தொலைக்காட்சி மையத்துக்கு பூட்டு; மைத்திரி - ரணில் இடையே பனிப்போர் உச்சம்

கொழும்பு, ஜூன் 07

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் குடும்பத்துக்குச் சொந்தமான ரிஎன்எல் தொலைக் காட்சியின் அலைவரிசை பரிமாற்ற மையத்தை, ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் உள்ள தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு அதிகாரிகள் நேற்றுமுன்தினம் மூடியுள்ளனர்.

2017ஆம் ஆண்டுக்குப்பின்னர், உரிமக்கட்டணத்தை செலுத்தவில்லை என்று கூறியே பொல்கஹவெலவில் உள்ள ரிஎன்எல் தொலைக் காட்சியின் அலைவரிசை பரிமாற்ற மையத்தை, தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு அதிகாரிகள் மூடியதாக கூறப்படுகிறது.

எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான அண்மைய பனிப்போரின் உச்சக்கட்டமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்த விவகாரம் நேற்று முன்தினம் நாடாளு மன்றத்திலும் எதிரொலித்தது.



ஊடக சுதந்திரம் பற்றிக் கேள்வி எழுப்பிய கூட்டு எதிரணிய நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, ரி.என்.எல். தொலைக்காட்சியின் அலைவரிசை பரிமாற்ற மையம் மூடப்பட்டதன் பின்னால் பெரும், பிரச்சினை இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நடைமுறைப் படுத்தப்பட்ட 100 நாள் வேலைத் திட்டம் தொடர்பாக, மைத்திரிபால சிறிசேன அண்மையில் முன்வைத்த கருத்துக்களை விமர்சிக்கும் வகையில் ரி.என்.எல். தொலைக்காட்சி செய்திகளை ஒளிபரப்பி வந்தமையே, அதன் பொல்கஹவெல பரிமாற்ற மையம் மூடப்படுவதற்குக் காரணம் என்றும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஊடக மற்றும் நிதி அமைச்சராக மங்கள சமரவீர, இந்த விவ காரம் பற்றி தனக்கு தெரியாது என்று குறிப்பிட்டதுடன், ஊடக சுதந்திரம் மதிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயத்தில் தனது அதிருப்தியை வெளிப்படுத்திய மங்கள சமரவீர,"இது ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயமல்ல என்றும் குறிப்பிட்டார்.

இதனிடையே, இந்த விவகாரம் கூட்டு அரசுக்குள் தீவிரமடைந்துள்ள மோதல்களை வெளிப்படுத்துவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'வழமையாகக் கூட்டமைப்பில் மேல்மட்ட விடயங்கள் பலவற்றை சம்பந்தன், சுமந்திரன் கூட்டு தங்களுக்குள் தீர்மானித்து முடிவு செய்து விடுகின்றது. அதற்கு மாவையரும் தலையாட்டி விடுவார். எங்களிடம் ஏதும் கேட்பதில்லை.' – என்பதே எம்.பிக்கள் பலரினதும் பங்காளிக் கட்சித் தலைவர்களினதும் சீற்றமாக இருந்து வருவதுண்டு.

ஆனால், நேற்றுமுன்தினம் புதிய சபாநாயகரைத் தெரிவு நடைபெற்றபோது கூட்டமைப்பினர் எல்லோரையும் – மாவையர், சுமந்திரன் எல்லோரையுமே – ஆச்சரியத்திலும், அதிர்ச்சியிலும் ஆழ்த்துவது போல தம் பாட்டில் ஒரு தீர்மானத்தை எடுத்து காய் நகர்த்த முயன்றார் சம்பந்தன்.

கூட்டு எதிரணியில் இருக்கும் சுதர்ஷினி ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயை ஆதரிக்கும் வகையில் பிரேரிக்கும் வகையில் அவர் எடுத்த முடிவு கூட்டமைப்புக்குள்ளேயே பலத்த சலசலப்பை உண்டுபண்ணியது. கூட்டமைப்பு எம்.பிக்கள் மத்தியில் அந்த முயற்சிக்குக் கிளம்பிய கடும் எதிர்ப்பினால் அந்த நிலைப்பாட்டிலிருந்து தாமாகவே 'ஜாகா' வாங்க வேண்டிய வீரானார் சம்பந்தன்.

தாம் கூட்டமைப்பின் தலைவர் என்பதற்காக, சரியாகக் காய் நகர்த்தி, நிலைமையைத் தமது தீர்மானத்துக்குச் சாதகமாக மாற்றாமல், எதேச் சாதிகாரமாக – தம் விருப்பப்படி – எந்த விடயத்தையும் தாம் தம் எண்ணப்படி நடத்தலாம் என நினைக்காதீர்கள் என சம்பந்தனுக்கு ஓர் எச்சரிக்கை மணி அடிப்பது போல இந்த விவகாரம் நடந்து முடிந்திருக்கின்றது.

நாடாளுமன்றத்துக்குள்ளேயே ஒரு தீர்மானம் திடுதிடுப்பென எடுத்து, சம்பந்தனின் காலை வாரி விடுவது போல கூட்டமைப்பின் எல்லா எம்.பிக்களும் ஒரேயடியாக சபையிலிருந்து வெளியேறியமை சம்பந்தனின் தலைமைக்கான ஓர் எச்சரிக்கை மணிதான்.

இப்படி ஒரு முடிவை சம்பந்தன் எடுத்திருக்கின்றார் என்பது சபையில் எழும்பி, சுதர்ஷினி ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேக்கு ஆதரவாக அவர் குரல் எழுப்பும் வரை அவரது தளபதி சுமந்திரனுக்குக் கூடத் தெரியாது என்பது நூற்றுக்கு நூறு உண்மை. சம்பந்தனின் நிலைப்பாட்டை கண்டு சுமந்திரன் கூட ஒரு கணம் ஆடித்தான் போய்விட்டார். கெம்பிக் கொண்டு நின்ற ஏனைய எம்.பிக் களை சமாளிக்கலாம் என்று பார்த்தார் சுமந்திரன். சரிவரவில்லை. எனவே, தாமும் அந்த எம்.பிக்களின் வழியைப் பின் பற்றி சம்பந்தனை தனியே சபையில் விட்டு அவரும் வெளியேற வேண்டியவரானார்.'

சம்பந்தன் ஏன் அப்படி நடந்து கொண்டார்? சுமந்திரனாலும் விடை காண முடியாத இந்த வினாவுக்கான பதிலை முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷதான் தந்தார்.

இந்தக் குளறுபடிகள் நடந்து அன்று மாலையின் பத்திரிகையாளனாக முன்னாள் ஜனாதிபதியை சந்தித்தேன். என்ன நடந்தது என்று வினாவினேன்.

''சுதந்திரக் கட்சியின் 16.எம்.பிக்கள் அணி சம்பந்தனை கடந்த வாரத்தில் தனியாக சந்தித்தது அல்லவா? பிரதி சபாநாயகர் தெரிவின்போது எமது வேட்பாளரைத் தாங்கள் ஆதரிப்பார்கள் என்ற உறுதிமொழியை அச்சமயத்தில் சம்பந்தன் வழங்கினார் என்று எஸ்.பி.திஸாநாயக்கா எங்களிடம் சொன்னார். அவர் திரும்பத் திரும்ப அந்த உறுதிமொழியை நம்பிக் கருத்து வெளியிட்டமையால், ஒரு பெண்மணியான சுதர்ஷினியை பிரதி சபாநாயகர் பதவிக்கு நிறுத்தினோம். ஆனால் கூட்டமைப்பின் அந்த உறுதி மொழி பின்பற்றப்படாமையால் அந்த முயற்சி பிழைத்துப் போயிற்று." – என்ற சாரப்பட விளக்கமளித்தார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தர்.

இப்போது விடயம் விளங்கியது. சு.க.வின் 16 எம்.பிக்கள் குழுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தமது தரப்பில் வேறு உதவியாளர்கள் யாருமின்றித் தனித்துச் சந்தித்தார். வழமையாக இத்தகைய சந்திப்பின்போது அவருக்கு அருகில் இருக்கும் சுமந்திரன் எம்.பி. அப்போது மெஸிடோனியாவில் ஒரு கூட்டத் தொடரில் பங்குபற்றச் சென்றிருந்தார். நாட்டில் இருக்கவில்லை.

இந்தச் சந்திப்பின்போது தமக்கு உதவியாளராக இருப்பதற்கு மற்றொரு ஜனாதிபதி சட்டத்தரணியான கனக ஈஸ்வரனை சம்பந்தன் அமைத்திருந்தார் எனத் தெரிகின்றது. ஆனால் நீதிமன்றில் வழக்கு விசாரணை ஒன்றில் அச்சமயத்தில் சிக்கிக் கொண்ட கனக ஈஸ்வரனினால் இக்கூட்டம் முடிவடைவதற்கு முன்னர் அந்த இடத்துக்கு வந்து சேர முடியவில்லை. அதனால் தனித்து பதினாறு எம்.பிக்களையும் சந்திக்க வேண்டியவரானார் சம்பந்தன்.

கூட்டமைப்பு – பிரதானமாக சுமந்திரன் காரணமாக – ஐக்கிய தேசியக் கட்சி பக்கமும் ரணிலின் பக்கமும் சாய்ந்து நிற்கின்றது என இந்தச் சந்திப்பின்போது சு.க.வினர் சரமாரியான குற்றச்சாட்டுக்களை சம்பந்தனிடம் வைத்தனர். அதை மறுத்தார் சம்பந்தன். அதற்காகத்தான் பிரதி சபாநாயகர் தெரிவின்போது ஐ.தே.கவை மீறி சு.க. தரப்பை ஆதரிப்போம் என்ற உறுதிமொழியை சம்பந்தன் வழங்கியிருப்பார் போலும்.

இந்தச் சந்திப்பின் பின்னர் சுமந்திரனைக் கண்டபோது, சு.கவினரின் சீற்றத்தை சுமந்திரனிடம் சம்பந்தன் எடுத்துரைத்திருக்கின்றார்.

"நீங்கள் அதிகம் ஐ.தே.க. பக்கமும் பிரதமர் ரணிலுக்கு ஆதரவாகவுமே செயற்படுகின்றீர்கள் என்ற கோபம் அவர்களுக்கு. நான் அப்படிக் கருதவேயில்லை. ஆனால் அவர்கள் அப்படி நினைக்கின்றார்கள். பார்த்து நடந்து கொள்ளுங்கள்!" –என்று சுமந்திரனுக்கு 'அட்வைஸ்' கொடுத்த சம்பந்தன், தாம் பிரதி சபாநாயகர் தெரிவின் போது அவர்களுக்கு ஆதரவு வழங்க இணங்கியுள்ளார் என்ற தகவலை மட்டும் சுமந்திரனுக்குச் சொல்ல மறந்தே போனார்.

அதன் விளைவுதான், நாடாளுமன்றில் நேற்று முன்தினம் எதிரொலித்தது. மறக்காமல் அதனை சுமந்திரனிடம் சம்பந்தன் கூறியிருப்பாராயின் விளைவுகள் இப்படி பகிரங்கமாக சம்பந்தனுக்கு எதிராகத் தோற்றாமல் நிச்சயம் 'சமாளிபிக்கேஷன்' வேலை ஏதும் செய்திருப்பார் சுமந்திரன்.

சரி, இப்போது சு.க.வின் அந்த 16 எம்.பிக்கள் தரப்பில் என்ன கூறப்படும் தெரியுமா?

"பார்த்தீர்களா நாம் சொன்னது தான் பிறகும் ஊர்ஜிதமாகியிருக்கின்றது? எங்களை ஆதரிக்க சம்பந்தன் உறுதிமொழி தந்தார். அதன்படி செயற் படவும் முயன்றார். ஆனால் எப்போதும் ரணிலின் பக்கமும், ஐ.தே.கட்சிக்கு சார்பாகவும் நிற்கும் சுமந்திரன், ஏனைய எல்லா எம்.பிக்களையும் கூட்டிக் கொண்டு வெளியேறி சம்பந்தனைக் கூடக் கைவிட்டு, எங்கள் முயற்சிக்கு ஆப்படித்து விட்டார். அவர் எப்போதும் ஐ.தே.க. பக்கம் தான் என்பதை மீண்டும் நிரூபித்து விட்டார்." – என்ற சாரப்படத்தான் குற்றம் சுமத்தப்படும்.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டமை போல செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் தலை மீதுதான். சுமந்திரன் மீது கூட்டமைப்பின் சக எம்.பிக்கள் குற்றம் சுமத்தாமல் விடும் விடயத்துக்கு சு. கவின் எம்.பிக்கள் குற்றம் சுமத்துவர். அவ்வளவுதான்.

இதெல்லாம் அரசியலில் சகஜமப்பா! -மின்னல்-

## வடக்கு..,

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் சார்பில் வடக்கு முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுமாறு கோரப்படுமிடத்து அதனைப் பரிசீலிக்கத் தான் தயாரெனவும், கடந்த மாகாண சபைத் தேர்தலில் தான் இழைத்த தவறை அடுத்த மாகாண சபைத் தேர்தலில் இழைக்கத் தயாரில்லை எனவும் பங்காளிக் கட்சித் தலைவர்கள் மத்தியில் அவர் நேற்றுக் குறிப்பிட்டார் என அறியவந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களின் கூட்டம் கொழும்பில் நேற்று நடைபெற்றது. இதன் போது பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. இதன்போது மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து கருத்து வெளியிடுகையிலையே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கடந்த தேர்தல்களில் ஏற்பட்ட பின்னடைவுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. இதில் கட்சிகளுக்கிடையிலான ஆசனப் பங்கீடுகளில் இறுதி நேரத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளும் தேர்தல் பின்னடைவுக்கான காரணங்களில் ஒன்றாக எடுத்துக் கூறப்பட்டிருந்தது. ஆகவே அடுத்து வரும் தேர்தல்களில் வேட்பாளர்கள் தெரிவு, ஆசன ஒதுக்கீடு என்பன தொடர்பில் முன்னதாகவே முடிவுகளை எடுக்க வேண்டுமென்றும் கோரப்பட்டது.

இதன்போது அடுத்து நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பல்வேறு கருத்துக்களை முன்வைத்தார்.

மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் வேட்பாளராகத் என்னைப் போட்டியிடக் கோரினால் அதனைப் பரிசீலிக்கலாமென ஊடகங்களுக்கு ஏற்கனவே தெரிவித்திருக்கின்றேன். அவ்வாறு கோரப்படுமிடத்து அது தொடர்பில் முடிவெடுக்கப்படும். அந்த முடிவானது கடந்த காலங்களில் இழைத்த தவறைப் போன்றதாக இருக்காது. ஏனெனில் கடந்த மாகாண சபைத் தேர்தலில் நான் இழைத்த தவறை இனியும் இழைக்கத் தயாரில்லை இதன்போது மாவை கூறியுள்ளார் எனக் கூட்டத்தில் கலந்துகொண்ட கட்சித்தலைவர் ஒருவர் காலைக்கதிரிடம் தெரிவித்தார்.

மாவை சேனாதிராசா தனது நிலைப்பாட்டை இவ்வாறு தெரிவித்துள்ளபோதும் இது குறித்து எந்தவித இறுதி முடிவும் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை எனவும் தெரியவருகின்றது. (ஐ-7)

# கலாசாரப் பேரணியும் கலைநிகழ்வும் சனி, ஞாயிறு தினங்களில் யாழ்.நகரில்

### திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில்

பல்வகை சமூகங்களையும் கலாசாரப் பின்னணிகளையும் கொண்ட இளைஞர்களையும் சிறுவர்களையும் கலைகள் ஊடாக இணைக்கும் செயற்திட்டத்தின் கீழ் திருமறைக் கலாமன்றத்தால் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாட்டின் ஒரு பகுதியாக நாளை மறுதினம் சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணத்தில் பல்வேறு கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதற்கமைவாக சனிக்கிழமை மாலை 03.30மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டப முன்றலில் இருந்து கலாசாரப் ஊர்திப் பேரணி ஆரம்பமாகும்.

இப்பேரணி கே.கே.எஸ் வீதி, சத்திரச்சந்தி, வைத்தியசாலை வீதி, மடம் வீதி வழியாக திருமறைக் கலாமன்றத்தை வந்தடையும். இப்பேரணியை அன்றைய மாலை கலைநிகழ்வுகளுக்கான விருந்தினர்களான வடமாகாண கௌரவ ஆளுநர் றெஜினோல்ட் கூரே, யாழ்.மாநகர கௌரவ முதல்வர்.இ.ஆனோல்ட், கிறசலிஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி.ஆஷிகா குணசேன ஆகியோர் ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

ஊர்திப்பேரணியை தொடர்ந்து மாலை 06.15மணிக்கு 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் யாழ்ப்பாணம், கண்டி, பொலனறுவை, பாணந்துறை திருமறைக் கலாமன்றங்கள் வழங்கும் பல்வேறு வகையான நடன நிகழ்வுகளும் மன்னார் முசலி கலைஞர்கள் வழங்கும் களிகம்பு நடனமும் இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை மாலை 05.30 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் ஆரம்பமாகும். இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் உயர் திரு.நா. வேதநாயகனும் சிறப்பு விருந்தினராக கிறசலிஸ் நிறுவனத்தின் கிளிநொச்சி கிளையின் பணிப்பாளர் ந.தயாபரனும் கலந்து கொள்ளவுள்ளதுடன் ஆசியுரைகளை பல்வேறு சமய தலைவர்கள் வழங்கவுள்ளனர்.

கலைநிகழ்வுகளாக இளவாலை, அவிசாவளை, இரத்தினபுரி, அனுராதபுரம், மன்னார், பாணந்துறை திருமறைக் கலாமன்றங்கள் வழங்கும் பல்வேறு வகையான நடனங்களும் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரி வழங்கும் நடனங்களும் இடம்பெறும். (ஐ)

# குடாநாட்டில் பரவலாக இடியுடன் கூடிய மழை

யாழ்ப்பாணம், ஜூன் 07

யாழ். குடாநாட்டில் நேற்று இரவு பரவலாக இடியுடனான மழை பொய்தது.

வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் நேற்றிரவு இடியுடன் கூடிய மழை பெய்தது.

காற்றின் வேகமும் சற்று அதிகமாக இருந்தது.

திடீர் மழையால் வலிகாமம் உள்ளிட்ட பகுதிகளில் வெங்காயம், புகையிலை உள்ளிட்ட பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

## பல்கலைகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிமுகம் செய்துள்ளது.

பகிடிவதையைக் கட்டுபடுத்தும் பொறுப்பு துணைவேந்தர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் ஆகியோரைச் சாரும் என்று உயர்கல்வி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிய தொலைபேசி செயலியை (அப்) அறிமுகம் செய்யும் நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்சமயம் பகிடிவதை மிலேச்சத்தனமானதாக மாறியிருக்கிறது. சிலரின் பாலியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் ஆயுதமாக இது மாறியிருக்கின்றது.

கடந்த ஆண்டில் பகிடிவதை தொடர்பான 280 சம்பவங்கள் பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான பகிடிவதைகளால் அதிகளவிலான மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் இணைந்து கொள்ள விரும்புவதில்லை.

பகிடிவதை காரணமாகச் சில மாணவர்கள் பல்கலைக்கழகங்களை விட்டு இடையில் விலகிச் செல்கிறார்கள் . சில மாணவர் அமைப்புக்களும் பொறுப்பற்ற விதத்தில் சட்டவிரோதமான முறையில் செயற்பட்டு வருகின்றன என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## வடக்கு கல்வியமைச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

கூறப்படும் சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு முன்பாகப் பாடசாலை ஆசிரியர்கள், பொதுமக்கள் இணைந்து நேற்றுப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் நல்லூர் கிட்டு பூங்கா முன்பாக ஒன்று கூடிய ஆசிரியர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அங்கிருந்து ஊர்வலமாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகத்துக்குச் சென்று அங்கு அமைதி வழியில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அங்கு அலுவலகத்தில் அமைச்சர் இல்லாதமையால் அங்கிருந்து பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவரிடம் அமைச்சருக்கான மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ -7)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# மன்றில் அம்பலமான பிளவுகள்

பிரதி சபாநாயகர் தெரிவு தொடர்பாக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் பல அரசியல் தரப்புக்களுக்கு இடையிலான முரண்பாடுகளை அம்பலப் படுத்தி நிற்கத் தவறில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியினால், அரசில் எஞ்சியிருக்கும் தனது எம்.பிக்களில் ஒருவரை பிரதிச் சபாநாயகர் பதவிக்குப் பிரேரிக்க முடியவில்லை.

தேசிய அரசில் – நல்லாட்சி அரசில் – எஞ்சியிருக்கும் சு.கவின் இரண்டு டசின் எம்.பிக்களில் இருவர் மட்டுமே அமைச்சர் பதவிகள் இல்லாமல் இருக்கின்றனர். ஒருவர் – தேசியப் பட்டியல் எம்.பியான அங்கஜன் இராமநாதன். மற்றவர் மஸ்தான் எம்.பி.

இவர்களுள் அங்கஜன் இராமநாதனை பிரதி சபாநாயகர் பதவிக்கு நிறுத்த சு.க. தலைமை விரும்பியது. எனினும் அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்தமையால் அது சாத்தியப்படாமல் போயிற்று என்று கூறப்படுகின்றது. மற்றவரான மஸ்தானுக்கு அதை வழங்க சு.க. விரும்பவில்லைப் போலும்.

எனவே, அதனை சு.க.வின் சார்பில் நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்யப்பட்டு தற்போது மஹிந்த தலைமையில் செயற்படும் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே உரிமை கோருவதற்கு இடமளித்து சு.க. விலகி நின்று கொண்டது.

அந்தப் பதவியை கூட்டு எதிரணி தரப்புக் கோருவதற்கு சு.க. விட்டுக் கொடுக்க முடியும் என்றால், ஏற்கனவே அப் பதவியில் இருந்தவரும் அண்மையில் தேசிய அரசில் இருந்து விலகியவரும், எதிர்க்கட்சியில் இருந்தபடியே தொடர்ந்தும் சு.க. தலைமைக்குக் கீழ் செயற்படுவருமான திலங்க சுமதிபாலவே, நீடிக்க அனுமதித்திருக்க முடியும்.

இன்னும் சு.க.தரப்பில் இருப்பவரிடம் இருந்து பிடுங்கப்பட்ட பதவியை சு.க.வின் பெயரில் கூட்டு எதிரணியில் செயற்படும் எம்.பியிடம் கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டமை என்ன நியாயமோ தெரியவில்லை.

மறுபுறத்தில் ஐம்பத்திநான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கூட்டு எதிரணி, ஐக்கியமாகவும், பலமாகவும் இருக்கின்றது எனக் கூறப்பட்டது. ஆனால், அதற்குள்ளும் இழுபறி இருக்கின்றமை நேற்றுமுன்தினம் பிரதிசபாநாயகர் தெரிவுக்கான வாக்கெடுப்பின்போது அப்பட்டமாக வெளிப்பட்டது. அத்தரப்பில் மூன்று, நான்கு எம்.பிக்கள் அச்சமயம் வெளிநாட்டில். ஐந்து, ஆறு பேர் நாடாளுமன்றுக்கு வரவில்லை. நாடாளுமன்றத்தில் இருந்தோரில் சுமார் ஒரு டசின் கூட்டு எதிரணியினர், பிரதி சபாநாயகர் தெரிவுக்கான வாக்கெடுப்பின் போது நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இருந்தபோதும் கூட, சபைக்கு வரவில்லை. முன்னாள் மேல் மாகாண முதலமைச்சரான பிரசன்ன ரணதுங்க தலைமையிலான ஒரு தரப்பினரே கூட்டு எதிரணியினால் பிரதி சபாநாயகர் பதவிக்குப் பிரேரிக்கப்பட்ட சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேக்கு ஆதரவு வழங்காமல் – வாக்கெடுப்பில் பங்கு பற்றாமலலேயே – நாடாளுமன்ற தேநீர் விடுதியில் தங்கியிருந்தனர். கூட்டு எதிரணியின் தலைவராகச் செயற்படும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கூட அந்தச் சமயம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இருந்தபோதும் வாக்கெடுப்பில் பங்குபற்றவில்லை.

இந்த வாக்கெடுப்பு விடயத்தில் அடுத்து சந்தி சிரித்தது தமிழ்க் கூட்டமைப்பின் செயற்போக்கிலாகும்.

இந்த விடயத்தில் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தம்பாட்டில் ஒரு முடிவை – தீர்மானத்தை – எடுத்துக் செயற்பட முனைந்து, ஒட்டு மொத்தக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவின் எரிச்சலுக்கு ஆளாக வேண்டியவரானார்.

பிரதிச் சபாநாயகர் பதவிக்கு ஐ.தே. கட்சி சார்பிலும், கூட்டு எதிரணி சார்பிலும் பெயர்கள் பிரேரிக்கப்பட்டதும், ஐ.தே.கட்சி சார்பில் பெயர் பிரேரிக்கப்பட்டமையை சம்பந்தன் ஆட்சேபித்தார்.

ஏற்கனவே, எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி சபாநாயகர் பதவி ஐ.தே.கட்சிக்கும், பிரதி சபாநாயகர் பதவி சுதந்திரக் கட்சிக்கும், குழுக்களின் பிரதித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் உரியது என்று வாதிட்ட சம்பந்தன், ஆகையால் கூட்டு எதிரணியில் இருந்தாலும் இன்னமும் சு.கவின் எம்.பியாகவே கணிக்கப்படும் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேக்கு போட்டியின்று அப்பதவியை வழங்குவதே சரி என்ற சாரப்படப் பேசினார்.

அவரது உரை, கூட்டமைப்பு சுதர்ஷினியை ஆதரிக்கும் என்றவாறாக அமைந்தபோது ஏனைய கூட்டமைப்பு எம்.பிக்கள் கெம்பினர்.

'சம்பந்தன் ஐயா எம்முடன் இது குறித்துப் பேசவில்லை. தம்பாட்டில் முடிவு எடுத்து அறிவிக்கின்றார். கூட்டு எதிரணியில் – அதுவும் மஹிந்த ராஜபக்ஷ தரப்பில் – இருக்கும் ஒருவரை நாம் எப்படி ஆதரித்து வாக்களிப்பது? எனவே இந்த வாக்கெடுப்பைப் புறக்கணித்து நாங்கள் மெல்ல வெளியேறுவது தான் சரியானது' – என்று அவர்கள் தங்களுக்குள் கொதித்துக் கொண்டனர். பின்னர் சம்பந்தனின் முடிவுக்குத் தங்கள் எதிர்ப்பைக் காட்டுபவர்கள் போல, அவர்கள் ஒவ்வொருவராக எழுந்து சபையை விட்டுவெளியேறத் தொடங்கினர். சம்பந்தனுக்கு அருகில் மாவை சேனாதிராசாவையும், சுமந்திரனையும் விட்டு விட்டு அவர்கள் அனைவரும் மெல்ல மாறினார். சுமந்திரனும் சற்று நேரம் இருந்து சம்பந்தனுக்கு விடயங்களைப் புரிய வைத்து விட்டுத் தாமும் வெளியேறினார். அவரை மாவை பின்தொடர்ந்தமையால் கூட்டமைப்புத் தரப்பில் சபையில் தனித்து விடப்பட்ட சம்பந்தன், தாமும் சற்றுநேரம் சபையில் இருந்து விட்டு வெளியேறி எதிர்க்கட்சித் தலைவரின் அறைக்குச் சென்றார்.

சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளேயை அப்பதவிக்குப் பிரேரிப்பவர் போல பேசிய சம்பந்தனினால் கூட, அவருக்கு ஆதரவாக வாக்களிக்க முடியவில்லை.

அந்தளவுக்கு கட்சிகளின் உட்பிளவை அம்பலப்படுத்தி, எடுத்துக் காட்டியது இந்த வாக்கெடுப்பு!

# பொழுதுபோக்குடன் வருமானம் ஈட்டக்கூடிய தேனீ வளர்ப்பில் ஈடுபட்டு பயன்பெறுவோம்




'தேனீக் கிராமம்' தொடக்க நிகழ்ச்சிநேற்றுமுன்தினம்காலை கோண்டாவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்உரையாற்றினார். அவரின் உரை வருமாறு:-

ஒவ்வொரு வருடத்தினதும் ஜூன் ஐந்தாம் நாள் சர்வதேச சுற்றாடல் தினமாக பிரகடனப் படுத்தப்பட்டு சூழலுடன் தொடர்புடைய பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இன்று காலை (நேற்றுமுன்தினம்) யாழ் மாநகரசபை உறுப்பினர்களினாலும் யாழ் பிரதேச செயலகம், நகர அபிவிருத்தி, அதிகார சபை, எமது விவசாய அமைச்சு எனஅனைவரும்ஒன்றிணைந்து முன்னெடுத்த மரம் நடுகை நிகழ்வில் நானும் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தேன். தற்போது சுற்றுச் சூழலுடன் தொடர்புடைய இந்த தேனீக் கிராமம் தொடக்க நிகழ்ச்சியில் பங்குபற்றுவதில் மகிழ் வடைகின்றேன்.

ஒவ்வொரு வருடமும் மே 20 ஆம் திகதி உலக தேனீக்கள் தினமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. உலக தேனீக்கள் தினம் என்ற நிகழ்வு எமக்கு பரீட்சயமல்லாத ஒரு நிகழ்வாகக் கூட கொள்ளப்படலாம். தேனீக்களுக்கு என்ன அவ்வளவு விசேடம்எனஎம்மில்பலர்கேள்வி கேட்கக் கூடும். சூழல் எமக்கு வழங்கியுள்ள பழங்களையும் காய் கனிகளையும் எமக்குக் கிடைக்கச் செய்வதற்கு தேனீக்கள் பெரும்பங்காற்றி வருகின்றண. இக்கனிகள்உருவாவதற்கு தேவையான மகரந்தங்களைக் காவிச் சென்று குறி களில் சேர்க்கின்ற பணியை இத் தேனீக்கள் மேற்கொள்கின்றன என்ற விடயம் எமக்கு புதிதாக இருக்கும். ஆனால் அதுதான் உண்மை.

தேனீ என்றவுடன் அதன் எதிர்மறையான செயற்பாடே எமக்கு நினைவுக்கு வரும். தேனீக்கள் எம்மைக் கொட்டிவிடும். பின்னர் மருந்து தடவித் தான் அந்த வலியைப் போக்க வேண்டும் என்று நாம் எண்ணுவோம். ஆனால் இந்தத் தேனீக்களை முறையாக கவனமாக கையாண்டால் அவற்றிலிருந்து எமக்கு அதிக பலன்கள் கிடைக்கப் பெறுவன. சுவையானதும் உடலுக்கு ஆரோக்கியத்தை வழங்கக்கூடியதுமான தேன் எமக்குக் கிடைக்கின்றது. அதே போன்று சுவையான பழங்கள் எமக்குக் கிடைப்பதற்கு இத் தேனீக்கள் காரணமாக இருக்கின்றன. அவை கோபமடைந்தால்தான் கொட்டும். இல்லை என்றால் மிகவும் சாதுவானஉயிரினங்கள்அவை.

தேனீக்கள்வாழ்க்கை முறைமை மனித இனத்திற்கு ஒரு படிப்பினையாகக் கூடக் கொள்ளப் படலாம். இராணித் தேனீக்கள், ஆண் தேனீக்கள், வேலைக்காரத் தேனீக்கள் என பல வகையான தேனீக்கள் ஒரு கூட்டத்தில் இருப்பன. இராணித் தேனீ அக்கூட்டத்தின்தலைமைதாங்குகின்ற தேனீயாகவும் ஆண் தேனீக்கள் இனப்பெருக்கச் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களாகவும் வேலைக்காரத் தேனீக்கள் தொழிலாளர்களாகவும் இயங்குகின்றன.

இயற்கையாகவே சூழலை நேசிக்குந் தன்மையைக் கொண்டவர் பொ.ஐங்கரநேசன். கடந்த வருடம் ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக் கொரு வரம் பெறுவோம் என்ற தொனிப் பொருளில் உலக சுற்றுச் சூழல் தின நிகழ்வுகளைத் தனியொருவராக அவர் முன்னெடுத்திருந்தார். அவர் அச்சமயத்தில் விவசாய அமைச்சர் பதவியிலிருந்து விலகியிருந்த நிலையிலும் அவரது உலக சுற்றுச் சூழல் தின நிகழ்வுகள் மிகச்சிறப்பு வாய்ந்தவையாக அமைந்திருந்தன. அதே போன்று இந்த வருடமும் தேனீக்கள் தொடர்பான ஒரு விழிப்புணர்வை பொதுமக்களுக்கிடையே ஏற்படுத்தும் நோக்கோடு தேனீக்கிராமம் என்ற இந்த திட்டத்தை பொதுமக்கள் மத்தியில் அறிமுகம் செய்ய முன்வந்துள்ளார். இத் திட்டத்தின் முதலாவது கிராமமாக கோண்டாவில் கிராமத்தைத் தெரிவு செய்து இப் பகுதியில் வாழும் ஐம்பது நபர்கள் ஒவ்வொருவருக்கும் தேனீப் பெட்டிகளும் தேனீக்களும் வழங்கப்படவிருக்கின்றன என எனக்கு அறியத்தரப்பட்டுள்ளது. அவர்களுள் பெரும்பாலானவர்கள் இளைஞர்கள், யுவதிகள் ஆவர்.

தேனீவளர்ப்பு முறையாக மேற்கொள்ளப்படின் அது ஓர் இலாபகரமான தொழில் முயற்சியாக அமையும். தேனீக்கள் சிறப்பாக வளர்க்கப்படும் போது அப்பகுதியிலுள்ள பழமரங்களும் கூடுதலான கனிகளை எமக்கு வழங்குவன. எனவே இந்த முயற்சியானது பராமரிப்புச் செலவுகள் குறைந்த ஒரு தொழில் முயற்சியாக இருக்கின்றமையால் இவற்றை மாணவர்களும் சிறப்பாக முன்னெடுக்க முடியும் என எண்ணுகின்றேன் வீட்டுத்தோட்டங்களுடன் தேனீ வளர்ப்பும் எமது இளைய சமுதாயத்தினரிடையே செல்வாக்குப் பெற வேண்டும் என்று எதிர் பார்க்கின்றேன்.

சுற்றுப்புறச்சூழல் மாசடைவதன் மூலம் இயற்கை வளங்களான நீர்நிலைகள், வனப் பகுதிகள், வனஜீவராசிகள், பறவையினம், கடல்வாழ் உயிரினங்கள், தாவரங்கள் ஆகிய அனைத்தும் பாதிக்கப்படுகின்றன. அவை நல்வாழ்வு கிடைக்கப்பெற வேண்டுமாயின் சுற்றுப்புறச் சூழலின் சமநிலை பாதுகாக்கப்படவேண்டும். இச்சம நிலையில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் சுற்றுச் சூழலை மட்டுமன்றி உயிரினங்களின் நல்வாழ்வுக்கும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகின்றன. நவீன விஞ்ஞானம், தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக கைத்தொழிற்துறை மேம்பட்டுள்ள போதும் சூழல் மாசடையுந்தன்மையும் அந்த அளவிற்கு அதிகரித்துள்ளது. இரசாயனக் கழிவுகள் நீர்நிலைகளை மாசுபடச் செய்கின்றமையால் உயிரினங்களுக்கு பெரும் ஆபத்தாக அது அமைகின்றது. மனிதன் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கக் கடமைப் பட்டவன். அவன் இந்தப் பிரபஞ்சத்தின் ஓர் அங்கம். ஆறறிவு பெற்றவன். ஆகவே சூழல் பாதுகாப்பு அவனின் முக்கிய கடப்பாடுகளில் ஒன்றாகும். மனிதன் நினைத்தவாறு உலகை அனுபவிக்கும் உரிமையைக் கொண்டவனல்லனீ.

சுற்றுச் சூழலைப் பாதுகாக்கத் தவறி யதன் விளைவுகளை மனித குலம் இப் போது தாராளமாக அனுபவிக்கத் தொடங்கி விட்டது. உலக வெப்பமயமாதல், ஓசோன் படலத்தில் துவாரங்கள் ஏற்பட்டுள்ளமையால் சூரிய புறஊதாக் கதிர் தாக்கங்களின் அளவு அதிகரித்துள்ளது. விளைவுகளாக நோய்ச் செறிவுகள் அதிகரித்துள்ளன. இந் நிலையில் மேற்குலகில் சூழலியல் செயற்பாடுகள் அரசியலின் முக்கியமானதொரு அம்சமாக மாறியுள்ள காரணத்தினால் பசுமைக் கட்சிகள் பல தோற்றம் பெற்றுள்ளன. அவை நாடாளுமன்ற ஆசனங்களையும் கைப்பற்றி மனிதனுக்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் இடையிலான பிணைப்புப் பற்றி மக்கள் மத்தியில் கூடுதல் விழிப்புணர்வை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

அந்த வகையிலேயே தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும் சூழலியல் தொடர்பான பல விடயங்களை பொதுமக்களுக்கு நாளும் எடுத்துக்கூறிவருகின்றது. மக்கள் வாழ்வில் தேனீக்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து தேனீவளர்ப்பை மக்கள் செல்வாக்குடன் முன் நடத்த தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. சென்ற வருடம் அரசாங்கத்தால் தேனீ வளர்ப்பு செயலூக்க நிகழ்வுகள் முடுக்கி விடப் பட்டிருந்தன.

(13 ஆம் பக்கம் பார்க்க...)

**நாளை**
08.06.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம் :உத்தரட்டாதி மு.இ 7.38 வரை
திதி : நவமி மு.ப 9.20 வரை
சுபநேரம் : 5.52 – 7.22 வரை
இராகுகாலம் : 10.22 – 11.52 வரை

# வாக்கெடுப்பில் ஏற்பட்ட தோல்வி எனக்கு ஏற்பட்ட தோல்வியல்ல

கொழும்பு, ஜூன் 07

பிரதி சபாநாயகர் பதவிக்கு நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் ஏற்பட்ட தோல்வி எனக்கு ஏற்பட்ட தோல்வியல்ல என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் திருமதி சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பிரதி சபாநாயகரைத் தெரிவு செய்வதற்காக இரகசிய வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது.

இதன் போது ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த குமாரசிறி தெரிவுசெய்யப்பட்டார் என அறிவிக்கப்பட்ட பின்னர் சபையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே உரையாற்றினார்.

இதன்போது அவர் தெரிவித்தவை



சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கூறுகிறார்

வருமாறு:-

இந்த தோல்வி எனக்கு ஏற்பட்ட தோல்வி அல்ல. அது பெண்களுக்கு ஏற்பட்ட தோல்வி.

முதலாவது பெண் பிரதி சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான வரலாற்று முக்கியத்துவம்மிக்க சந்தர்ப்பம் இழக்கப்பட்டுள்ளது. இந்தப் பதவிக்கு முதற்தடவையாக பெண் ஒருவரின்பெயர்முன்மொழியப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் ஏற்பட்ட தோல்வி சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே என்ற நபருக்கு ஏற்பட்ட தோல்வி அல்ல. பெண் ஒருவருக்கு ஏற்பட்ட தோல்வியாகும். இருந்தபோதும், நாடாளுமன்றத்தின் உயர் பதவிக்கு பெண் ஒருவர் போட்டியிடும் நிலைக்கு முன்னேறியிருப்பது வரவேற்கத்தக்கது.

எனது பெயரை முன்மொழிந்த எஸ்.பி.திசாநாயக்க மற்றும் ஆதரவு வழங்கிய எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரசகரும மொழித் தேர்ச்சி வாய்மூலப் பரீட்சை 9,10, 11ஆம் திகதிகளில்!

நாட்டின் தெற்கு , மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கேகாலை மாவட்டத்திலும் கடந்த 2018.05.26, 27 மற்றும் 28ஆம் திகதிகளில் நடத்த தீர்மானிக்கப்பட்டு காலவரையறையின்றி பிற்போடப்பட்ட அரசகரும மொழித்தேர்ச்சி வாய்மூலப் பரீட்சை மீண்டும் எதிர்வரும் 09, 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளது.

அதன்பிரகாரம் பரீட்சை அனுமதிப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடைபெறும் தினங்களும், இடங்களும் பின்வருமாறு தீருத்தம் செய்யப்படுகின்றன.

பரீட்சை அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேர்முகப் பரீட்சைக் குழு இலக்கமும், நேரமும் மாற்றம் செய்யப்படாது.

புதிய அனுமதிப்பத்திரம் அனுப்பப்படமாட்டாது என்பதையும், முந்தைய பரீட்சை அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் என்பதையும் கருத்திற்கொள்ளவும்.

இதுதொடர்பாக அமைச்சின் உத்தியோகபூர்வ இணைத்தளமான www.languagesdept.gov.lk பார்வையிடலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பஸ் விபத்து; 12 பேர் படுகாயம்

கொழும்பு, ஜூன் 07

தனியார் பஸ்கள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் பஸ்ஸில் பயணித்த 12 பேர் படுகாயமடைந்துள்ளனர் என ஹபரண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து திருக்கோவில் நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றின் மீது பின்னால் வந்த மற்றொரு பஸ் மோதியமையால் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை ஹபரண, ஹரிவடுன்ன பகுதியில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த 12 பேரில் நான்கு பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்றும் அவர்களை ஹபரண வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக பொலன்னறுவை மற்றும் தம்புள்ளை வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## போதைப்பொருள் பாவனையின் தடுப்பு குறித்த விழிப்புணர்வு



கொழும்பு, ஜூன் 07

மட்டக்களப்பு மண்முனைமேற்கு பிரதேச செயலக சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் போதைப் பொருள் பாவனை தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு வேலைத் திட்டம் நடைபெற்றது.

சமூக சேவை உத்தியோகத்தர் பி.திருச்செல்வம் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மது மற்றும் போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலான ஸ்டிக்கர்கள் வாகனங்களில் ஒட்டப்பட்டமையுடன், பிரசுரங்களும் மக்களுக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மண்முனைமேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், வவுணதீவு பொலிஸ் பொறுப்பதிகாரி பி.ரி.நஸீர், மண்முனைமேற்கு பிரதேச சபை தவிசாளர் எஸ்.சண்முகராஜா மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூன் 07

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை- **கிளிநொச்சி பிரதேசத்தில் -** ஸ்கந்தபுரம், யுனியன்குளம், கோணாவில் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில் -** மகாமயிலங்குளம், குடாகச்சக்கொடிய, துட்டுவாகை, குடாகச்சகொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் - மின் விநியோகம் தடைப்படுத்தப்படுமென்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ

## கிராமசேவையாளர்ளுக்கு 10 நாள் பயிற்சி நெறி

மட்டக்களப்பு மாவட்டத்துக்குப் புதிதாக நியமனம் பெற்றுள்ள கிராமசேவையாளர்களுக்கான 10 நாள் பயிற்சிநெறி மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மாணிக்கம் உதயகுமார் தலைமையில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.


வளவாளராக ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் ஜே.பத்திநாதன் பயிற்சிகளை வழங்கினார்.

இந்த 10 நாள் பயிற்சிநெறியில், தாபனக் கோவை, அலுவலக நடைமுறைகள், கோவைகள், மாவட்டம் சம்பந்தமான விடயங்கள், பிரதேசம் மற்றும் கிராமங்கள் சார் விடயங்கள் என பல்வேறு விடயப்பரப்புகளின்கீழ் கற்பித்தல்கள் நடைபெறவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு புதிய கிராம உத்தியோகத்தர்களாக 76 பேர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்வில், மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந்த், உதவி மாவட்டச் செயலாளர் ஏ.நவேஸ்வரன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.தயாபரன், மட்டக்களப்பு ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் எம்.கோமளேஸ்வரன், உப தலைவர் ரி.லிங்கேஸ்வரன், செயலாளர் எஸ்.ஜீவிதன், உப செயலாளரும் அகில இலங்கை உறுப்பினருமான எம்.ஐ.ஏ. சுபைர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஹற்றனில் இந்திய அரசின் நிதியில் 50 விடுகளுக்கு அடிக்கல் நடல்



ஹற்றன், ஜூன் 07

ஹற்றன் வெலிஓயா புதுக்காடு தோட்டத்தில் அமைக்கப்படவுள்ள இந்திய அரசின் நிதியுதவியுடன் 50 புதிய வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

மலைநாட்டு புதிய கிராமங்கள், உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் மூலம் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கண்டி, இந்திய உதவித் தூதுவர் திரேந்திரசிங், அமைச்சர் பழனி திகாம்பரம், கல்வி இராஜாங்க அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம. திலகராஜ், இந்தியத் தூதரகத்தின் இரண்டாம் நிலை செயலாளர் ரமேஸ் ஐயர், மத்திய மாகாண சபை உறுப்பினர்களான சிங். பொன்னையா, சோ. ஸ்ரீதரன், மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் புத்திரசிகாமணி உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

## ரமழான் சிந்தனை



ரமழான் மாதத்தின் இறுதி பத்து நாள்களில் பள்ளிவாசலில் இஃதிகாஃப் இருந்து குர்ஆன், ஹதீஸ், மற்றும் தொழுகை இபாதில் ஈடுபடுவதுடன் ஆயிரம் மாதங்களின் சிறப்பான லைலதுல் கத்ர் இரவை பெற்றுக் கொள்வது விஷேட அம்சமாகும்

**நூல் - மிஃஹாத்**

| ஸஹர் | சுபஹ் |
|---|---|
| 4.25 | 4.31 |

மஃரிப் (நோன்பு திறக்கும் நேரம்) 6.29

# கல்வியியற் கல்லூரிக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 07

2015ஆம் ஆண்டில் உயர் தரப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கல்வியியற் கல்லூரிக்கு இணைத்துக் கொள்ளும் பணி நேற்றுமுன் தினம் ஆரம்பமானது.

களுத்துறை பஸ்துன்ரட்ட என்ற தேசிய கல்வியியற் கல்லூரிக்கு நேற்றுமுன்தினம் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். கல்வி நட வடிக்கைகளை முறையாக முன்னெடுப்பதற்காக இந்த பணி மேற்கொள்ளப்பட்டு வரு கின்றது.

கடந்த வருடத்தில் களுத் துறை கல்வியியற் கல்லூ ரிக்கு 279 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்ட னர். இந்த வருடத்தில் இத் தொகை 310 ஆக அதிகரிக் கப்பட்டுள்ளது என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது.

# சிறுநீரக நோய்த் தடுப்பு தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



களனி பல்கலைக்கழகத் தில் தாபிக்கப்படவுள்ள சிறு நீரக நோய் தொடர்பான தக வல் மற்றும் ஆய்வுநிலையம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன முன்னி லையில் கைச்சாத்திடப்பட் டது.

ஜனாதிபதி அலுவலகத் தில் நேற்றுமுன்தினம் முற் பகல் நிகழ்வு இடம்பெற்றது.

சிறுநீரக நோய் தடுப்பு ஜனாதிபதி செயலணியின் பணிப்பாளர் அசேல இத்த வெல மற்றும் களனி பல் கலைக்கழகத்தின் உபவேந் தர் பேராசிரியர் டி.எம்.சமர சிங்ஹ ஆகியோர் இந்த ஒப்பந் தத்தில் கைச்சாத்திட்டனர்.

களனி பல்கலைக்கழகத் தால் மேற்கொள்ளப்பட் டுள்ள சிறுநீரக நோய் தொடர் பான ஆய்வு, நாட்டின் அனைத்து மாவட்டங்களுக் கும் பரப்புதல், சிறுநீரக நோய்க் கான காரணத்தை கண்டறி வதற்கான ஆய்வுகளை மேற் கொள்ளுதல், ஏனைய தேசிய மற்றும் சர்வதேச தரப்பின ருடன் இணைந்து குறித்த ஆய்வுத் தகவல்களை பரி மாறிக்கொள்ளுதல், சிறு நீரக நோயை தவிர்ப்பதற்கு தேவையான கொள்கைகள் திட்டங்களுக்கான பரிந்துரை களை வழங்குதல் போன் றவை இந்த மத்திய நிலை யத்தினால் மேற் கொள்ளப் படும் என எதிர்பார்க்கப்படு கின்றது.

# தினசரி ராசி பலன் (07.06.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் வைகாசித் திங்கள் 24 ஆம் நாள் வியாழக்கிழமை. அஷ்டமித்திதி பகல் 12.37 மணி வரை பின்னர் நவமி. நட்சத்திரம்: பூரட்டாதி இரவு 10.04 மணி வரை. பின்னர் உத்தரட்டாதி. சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 1.44 மணி முதல் 3.18 மணி வரை.

**சுபநேரம்** - காலை 7.23 மணி முதல் 5.53 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - வைகாசி மாத தேய்பிறை நவமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - பூரட்டாதி.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக் கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வெளி நாட்டு வர்த்தகத்தால் ஆதாயம் பெருகும். வீட்டில் விஷே சங்கள் தொடங்குவதற்கான அறிகுறிகள் தென்படும்.

**ரிஷபம்** மத்திமமான நாள். வருமானம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். தேகாரோக்கி யம் பாதிப்படையும். வீட்டிலும் வெளியிலும் விட்டுக் கொடுத்துப் போவது நன்மையைத் தரும்.

**மிதுனம்** இன்பமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். இல்லத்தில் இனிமையான சூழல் நிலவும். தொடர்ச்சியாக இருந்த மனக் கஷ்டங்கள் தீரும். சிலருக்கு புதிய தொழில் அமைப்பு ஏற்படும்.

**கடகம்** யோசனையான நாள். தனவரவு குறையும். குடும்பத் தில் உறவினர்களுடன் பிரச்சினை உண்டாகும். உத்தி யோகத்தில் மேலதிகாரிகளுடன் வாக்குவாதம் உண்டா கும். பிள்ளைகளால் கவலை உண்டாகும்.

**சிம்மம்** சம்பலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சரிசம மாக இருக்கும். குடும்ப உறவு ஓரளவு சீராக இருக்கும். வியாபாரத்தில் கடன் பெற்று செய்யக் கூடிய முதலீடுக ளைத் தவிர்க்கவும்.

**கன்னி** மகிழ்ச்சியான நாள். பொருளாதாரம் மனத் திருப்தியைத் தரும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆடை, அணி மணிச் சேர்க்கை உண்டாகும். வெளிநாட்டு உறவினர் களால் களிப்பும், கலகலப்பும் அதிகரிக்கும்.

**துலாம்** எழுச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக் கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். செல்வாக்கும், செழிப்பும் அதிகரிக்கும். வீடு, வாகனம் புதுப்பிக்கும் சூழல் ஏற்படும்.

**விருச்சிகம்** குழப்பமான நாள். அலுவலகப் பணிகளை பிறரை நம்பி ஒப்படைக்கலாகாது. பணவரவு குறையும். குடும் பத்தில் குதர்க்கப் பேச்சும், கோபமும் கொள்வார்கள். மன நிம்மதி குன்றும்.

**தனுசு** விருத்தியான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரம் சுறுசுறுப்பாக நடக்கும். சுயதொழில் விருத்தியடையும். மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி அடைவார்கள்.

**மகரம்** மேன்மையான நாள். பொருளாதாரம் தேவைகளைப் பூர்த்தி செய்யும். குடும்ப உறவு அன்புடையதாக இருக் கும். சகோதர உறவு வலுவடையும். விட்டுப் பிரிந்த உற வுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புண்டாகும்.

**கும்பம்** இனிமையான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். ஆடை, அணி மணிகள் சேரும். நினைத்த காரியங்கள் நிறைவேறும். தடைப்பட்ட சுப காரியம் ஒப்பேறும்.

**மீனம்** தீமையான நாள். தனவரவு குறையும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் தலைதூக்கும். வியாபாரத்தில் பொருள்கள் தேங்கிக் கிடக்கும். தொழில் செய்யும் பெண்களுக்கு பல இடைஞ்சல்கள் உண்டாகும்.

சந்திராஷ்டம நாள்: புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங் களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

# ஜனாதிபதி மாளிகையில் இரத்ததான முகாம்!



கொழும்பு, ஜூன் 07

ஜனாதிபதி அலுவலக பணிக்குழாம் அலு வலர்களின் பங்குபற்றுதலுடன் ஏற்பாடு செய் யப்பட்ட இரத்ததான முகாம் நடைபெற்றது.

இந்த இரத்ததான முகாம் கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் முற்பகல் இடம்பெற்றது.

ஜனாதிபதி மாளிகையில் இரத்ததான முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இதனை பார்வையிட்டார். இதன்போது ஜனாதி பதி வைத்திய குழுவினர் உட்பட பணிக் குழாமினரிடம் சுமுகமாக கலந்துரையாடி னார்.

# குடாநாட்டில் பிரித்தானிய பல்கலைகளின் செயற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 07

IIS city campus நிறுவனம் Pioneer Institute of Bussiness and Technology (PIBT) நிறுவனத்து டன் இணைந்து குடாநாட்டிலே பிரித் தானிய பட்டக் கல்வியை அறிமுகப் படுத்தும் நோக்குடன் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 10 மணிக்கு யாழ். நகர் ரில்கோ ஹோட்டலில் அதற்கான நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

IIS நிறுவனத்தின் பிரதம நிறை வேற்று அதிகாரி குலரட்ணம் விக் னேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் PIBT நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டொக்டர் கபில ரணசிங்க மற்றும் முன்னணி பாடசாலை அதிபர்கள், கல்வி/தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள், அரச மற்றும் தனியார்துறை அதிதிகள் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

இந் நிகழ்வில் Greenwich university - UK, Leeds Trinity University -UK மற்றும் Scottish Qualifications Authority போன்ற பிரித்தானிய முன்னணி பல்கலைக் கழகங்களின் பட்டக் கல்விகளின் அறி முக விளக்கங்கள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இ

# பௌத்த ஆலோசனை சபை மைத்திரியுடன் சந்திப்பு



கொழும்பு, ஜூன் 06

பௌத்த ஆலோசனை சபை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பங்குபற்று தலுடன் ஒன்றுகூடியது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன் தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்த ஒன்று கூடலில் பௌத்த சாசனத்தின் வளர்ச் சிக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நட வடிக்கைகள் குறித்து கலந்துரையாடப் பட்டது.

வரலாற்று சிறப்புமிக்க பொலன்னறுவை சொலஸ்ம ஸ்தானாதிபதி சியம்மகா நிக் காயவின் அஸ்கிரி மகா விகாரை பிரிவின் அனுநாயக்க வண. வெடறுவே உபாலி நாயக்க தேரர், அஸ்கிரி மகா விகாரை பிரி வின் அநுராதபுர பிக்குகள் பல்கலைக்கழ கத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் வண. ஆனமடுவே தம்மதஸ்சி அனுநாயக்க தேரர், சாஸ்திரபதி ராஜகீய பண்டித மாஹல்லே தர்ம கீர்த்தி ஸ்ரீ சுமங்கல விபுலதிஸ்ஸ ஹிதான சங்க நாயக்க தேரர் மற்றும் வண. நாரம்பனாவே ஆனந்த நாயக்க தேரர் உள் ளிட்ட மகா சங்கத்தினர் இக்கலந்துரையாட லில் பங்குபற்றியதுடன், புத்த சாசன அமைச் சின் செயலாளர் சந்ரபேம கமகே உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# கூட்டு எதிரணியின் பிளவு வெளிச்சத்துக்கு வந்தது

## பிரதி சபாநாயகர் தெரிவின்போது



கொழும்பு, ஜூன் 07

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் பிரதி சபாநாயகர் தெரிவின்போது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் முன்னிறுத்தப்பட்ட சுதர்சினி பெர்னாண்டோபுள்ளேக்கு, மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கூட்டு எதிரணியின் ஒரு பகுதி உறுப்பினர்கள் ஆதரவு அளிக்கவில்லை.

சுதர்சினி பெர்னாண்டோ புள்ளேவின் பெயரை பிரதி சபாநாயகர் பதவிக்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க முன் மொழிந்தார்.

அதனை கூட்டு எதிரணி யின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார வழி மொழிந்தார்.

அதேவேளை, ஐ.தே.க. தரப்பில் ஆனந்த குமாரசிறியின் பெயர் முன்மொழியப்பட்டமையால், இரகசிய வாக்கெடுப்பை நடத்த சபாநாயகர் உத்தரவிட்டார்.

இரகசிய வாக்கெடுப்பு சுமார் 1 மணித்தியாலம் 45 நிமிடங்கள் வரை இடம்பெற்றது.

இதற்கு முன்னதாக உரையாற்றிய கூட்டு எதிரணியின் தலைவரான தினேஸ் குணவர்த்தன, பிரதி சபாநாயகராக சுதர்சினி பெர்ணாண்டோபுள்ளே தெரிவு செய்யப்படுகின்றமையை ஆதரிக்குமாறு கோரியிருந்தார்.

இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது, கூட்டு எதி ரணியின் 11 உறுப்பினர்கள் நாடாளுமன்ற உணவகத்தில் அமர்ந்திருந்தனர்.

இவர்களில் பலர், கேள்வி நேரத்தின் போது 'சபையில் அமர்ந்திருந்து. கேள்வி எழுப்பியிருந்தனர்.

வாக்கெடுப்பு நடந்த போது, சமல் ராஜபக்ஷ உள்ளிட்ட ஒரு பகுதி கூட்டு எதிரணி உறுப்பினர்கள் மாத்திரம் வாக்களித்தனர்.

மஹிந்த ராஜபக்ஷ முன்னதாக நாடாளுமன்றத்தில் இருந்த போதும் அவர் வாக்களிக்கவில்லை.

கூட்டு எதிரணியின் 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

கூட்டு எதிரணிக்கு நாடாளுமன்றத்தில் 54 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களில் மூவர் வெளிநாடு சென்றுள்ளனர். நால்வர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்துக்கு வரவில்லை.

பிரசன்ன ரணதுங்க தலைமையிலான கூட்டு எதிரணியின் ஒரு குழுவினரே நாடாளுமன்ற உணவகத்தில் அமர்ந்திருந்தனர்.

முன்னதாக, ஐ.தே.க. வேட்பாளரைத் தோற்கடித்து. சுதர்சினி பெர்ணாண்டோபுள்ளேவை வெற்றிபெறவைப்பது என்று மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருந் தது என்று தினேஸ் குணவர்த் தன தெரிவித்துள்ளார்.

## வர்த்தக தொலைபேசி விவரக்கொத்தின் முதலாவது பிரதி ஜனாதிபதியிடம் கையளிப்பு!



2018, 2019ஆம் ஆண்டிற்கான SLT வருடாந்தம் வெளியிடும் மேல் மாகாண வர்த்தக தொலைபேசி விவரக் கொத்தின் முதலாவது பிரதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தலைவர் குமாரசிங்க சிறிசேனவினால் அப்பிரதி ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது. SLT rainbow pages நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி மல்ராஜ் வலப்பிட்டியவும் இத்ன்போது பிரசன்னமாகியிருந்தார்.

SLT rainbow pages தொலைபேசிவிவரக்கொத்தில் அரச தகவல்கள், சமய நிறுவனங்களின் தகவல்கள் சுமார் 1300 பேர்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பொருள்கள் மற்றும் சேவைகள் பட்டியல் படுத்தப்பட்டுள்ளதுடன், அச்சிடப்பட்டுள்ள விவரக் கொத்துக்கு மேலதிகமாக rainbowpages.lk இணையத்தளம், கைத் தொலைபேசி, மென்பொருள் இறுவட்டுபோன்ற பல்வேறு நவீன தொழில்நுட்ப முறைமைகளின் கீழ் வாடிக்கையாளர்களுக்கு தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

## ஜனாதிபதி தலைமையில் மேல்மாகாண பாடசாலைகளுக்கான ஆசிரியர் நியமனம்



மேல்மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு 496 பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், இடம்பெறவுள்ளது.

கொழும்பு நெலும்பொக்கன என்ற தாமரைத் தடாகத்தில் இன்று நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்டவர்கள் காலை 8.30 இற்கு சமுமளிக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனம் தொடர்பான ஆவணங்கள் கடந்த மாதம் 28, 29 மற்றும் 31 ஆம் திகதிகளில் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு நேற்றுமுன்தினம் தொலைபேசியினுடாக அழைப்பு விடுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மேல்மாகாண மாகாண அரச சேவை ஆணைக் குழுவில் ஆவணங்கள் வழங்கப்பட்டன. நேர்முகப்பரீட்சைக்கு தமிழ் மொழியில் 118 பேர் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனடிப்படையிலேயே இந்த ஆசிரியர் நியமனங்கள் வழங்கும் நிகழ்வு இன்று ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேல்மாகாண பாடசாலைகளில் நிலவும் விஞ்ஞானம் வர்த்தகம், தகவல் தொழில்நுட்பம், நடனம், இசை மற்றும் ஆரம்ப வகுப்புகளுக்கு நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த நியமனங்கள் இடம்பெற்றுள்ளன.

இவர்கள் நியமனங்களை பெற்றுக்கொள்வதற்கான ஆவணங்கள் முழுமையாக வழங்கப்படடுள்ளன என மேல்மாகாண மாகாண அரச சேவைஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

இதுதொடர்பான பெயர்ப் பட்டியலை இணையத்தளத்தில் வெளியிடுவதற்கான பட்டியல் தயாரிக்கப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு நாணய ஒதுக்கம் 950 கோடி அமெரிக்க டொலர்கள்!

கொழும்பு, ஜூன் 07

நாட்டின் வெளிநாட்டு நாணய ஒதுக்கம் இந்த வருட இறுதியில் தொள்ளாயிரத்து 50 கோடி அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்கும் என்று இலங்கை மத்திய வங்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கம் தற்சமயம் 770 கோடி அமெரிக்க டொலர்களாகும்.

இதேவேளை, இலங்கை பொருளாதாரத் துறையில் அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறித்து சர்வதேச நாணய நிதியம் பாராட்டியுள்ளது.

## 57 லட்சம் லீற்றர் பால் உற்பத்தி!

கொழும்பு, ஜூன் 07

இந்த வருடத்தில் கம்பஹா மாவட்டத்தில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒரு கோடி 76 லட்சம் லீற்றர் பால் உற்பத்தியில் 57 லட்சம் லீற்றர்களை ஏப்ரல் மாதத்துக்குள் உற்பத்தி செய்ய முடிந்திருக்கின்றது என மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் ஜீ.ஏ.எல்.எஸ்.கே. விக்கிரமதிலக்க தெரிவித்துள்ளார்.

இது 33 சதவீத வளர்ச்சியாகும். உப தயாரிப்புக்களான யோகட் மற்றும் தயிர் உற்பத்தியும் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளன.



## தென்மாகாணத்தில் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் முன்னெடுப்பு!

கொழும்பு, ஜூன் 07

தென்மாகாண அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் பலப்பிற்றிய பிரதேச செயலகப் பிரிவில் 22 அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாகாண சபை உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் முன்னெடுக்கப்பட்ட 16 செயற்றிட்டங்கள் நிறைவடைந்திருக்கின்றன என பலப்பிற்றிய பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்காக ஒரு கோடி 60 லட்சம் ருபா செலவிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir









யாழ் நகரை தூய்மையான நகரமாக்கும் வேலைத் திட்டத்திற்கான நிகழ்வு யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்கரைத் திடலில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் ரெஜி னோல்ட் குரே வடமாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் , யாழ். மாநகர சபை முதல்வர் இ.ஆர்னோல்ட், யாழ். அரசாங்க அதிபர், பிரதேச செயலர், வட மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள், முப்படை உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

உலக சுற்றாடல் தினமான நேற்றுமுன்தினம் (ஜூன் 05) மரம் நடும் நிகழ்வும் இடம்பெற்றது. அந் நிகழ்வின் சில பதிவுகள்... (இ-19)

# இயக்கச்சி காட்டுப் பகுதியில் அனுமதியின்றி பனைகள் தறிப்பு

## பச்சிலைப்பள்ளி தவிசாளர் கவனத்துக்கு!





இயக்கச்சி, ஜூன் 07

இயக்கச்சி காட்டுப்பகுதியில் பல நாள்களாக தொடர்ச்சியாக இரவு,பகலாக சட்டவிரோதமாக பனையின் மிகப் பெரிய வளமான பனை மரங்கள் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த நபர்களால் தறிக்கப்படுகின்றன என அப்பகுதியினுடைய பொது அமைப்புக்களாலும், தனி நபர்களாலும் தொடர்ச்சியாக தெரியப்படுத்தப்பட்டும் எந்த வித சட்ட நடவடிக்கையையும் உரிய தரப்பினர் மேற்கொள்ள முன்வராமையினால் குறித்த விடயம் பச்சிலைப் பள்ளி பிரதேச சபை தவிசாளர் சு.சுரேனின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதை அடுத்து இது தொடர்பில் தவிசாளர் தனது குழுவினருடனும், அப்பகுதி மக்களுடனும் நேரில் சென்று ஆராய்ந்ததுடன் உரிய தரப்பினருக்கு தொலைபேசி ஊடாக நிலைமைகளை எடுத்து விளக்கினார்.

அத்தோடு தொடர்ச்சியாக இத்தகைய இயற்கைவள அழிப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும். இதனை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கு உரிய தரப்பினருக்கு மக்கள் சார்பாக தான் அழுத்தம் பிரயோகிப்பேன் எனவும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைவர் சுரேன் உறுதியளித்தார்.

பிரதேச சபையின் உபதவிசாளர் மு.கஜன், உறுப்பினர்கள் ரமேஷ், வீரபாகுதேவர்,கோகுல் ஆகியோருடன் இயக்கச்சி பிரதேச கமக்கார அமைப்பினர் என பலரும் நிலைமைகளை நேரில் ஆராய்ந்துள்ளனர். (இ)

# 21 பயனாளிகளுக்கு வேளான் கருவிகள் மாகாண உறுப்பினர் ரவிகரன் வழங்கினார்





வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் 2018ஆம் ஆண்டின் பிரமாண அடிப்படையிலான ஒதுக்கீட்டில் இருந்து மூன்று இலட்சத்து எழுபதாயிரம் ரூபாய் நிதி வேளாண் கருவிகளை வழங்கவென ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த ஒதுக்கீட்டின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட வேளாண்கருவிகள் தெரிவு செய்யப்பட்ட இருபத்தொரு பயனாளர்களுக்கு கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு முல்லைத்தீவு பதில் உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி.ந.விசயன் தலைமையில், முல்லைத்தீவு விவசாயத் திணைக்களத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய ரவிகரன்–

எமது மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மிகவும் அதிகம். அவர்களுக்கான தேவைகளும் அதிகமாக உள்ளன. இந்நிலையில் முடிந்தளவு உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களாகவுள்ள நீங்கள் இதன் மூலம் பயனடைய வேண்டும். உங்களுடைய வளர்ச்சியின் மூலம்தான் இத்திட்டங்களை நாம் தொடர்ந்து முன்னெடுக்க முடியும் என்று தெரிவித்தார்.

நிகழ்வில் கலந்து கொண்ட பயனாளர்கள் ரவிகரனிடம் வேளாண் கருவிகளை பெற்றுக் கொண்டனர். (இ-81)





யாழ். மாநகர முதல்வர் இ.ஆர் னோல்ட் புனித றமழான் மாதத்தையொட்டி நேற்றுமுன்தினம் காலை முஸ்லிம் பகுதிகளுக்கு நேரில் வருகை தந்து மின்சார விளக்குகள் பொருத்தும் வேலைத் திட்டங்களை மேற்பார் வையிட்டார். அவருடன் மாநகர சபை உறுப்பினர் கே.எம்.நிலாம், எம்.நிபாஹிர் ஆகியோரும் முதல்வரின் இணைப்பாளர் ஏ.ஜி.நௌபர் மற்றும் முக்கியஸ்தர்களும் வந்தனர். (இ-19)

# திசைமுகப்படுத்தல் நிகழ்வு சனியன்று

யாழ்ப்பாணம், ஜூன் 07

யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தினால் நடத்தப்படுகின்ற வணிகமாணி (வெளிவாரி) கற்கை நெறியின் பிரிவு இரண்டின் திசை முகப்படுத்தல் நிகழ்வு நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடதத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன என்றும் மேற்படி கற்கை நெறிக்கு பதிவு செய்த மாணவர்கள் பங்குபற்றுமாறும் நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

(இ)



கலாநிதி
இரத்தினம்
நித்தியானந்தன்




# அதிசயக் கோயில் அங்கோர்

**தெற்கு**

ஏ. இடதுபுறம் - விஷ்ணு (நான்கு கரங்களுடன் அமர்ந்த நிலையில்) சுற்றிலும் அப்சரஸ்கள்.

ஏ. நடுவில் கதவுக்கு மேலே - தலையின்றி வயிற்றில் முகம் கொண்ட அரக்கனோடு போரிடும் ராமன், லட்சுமணன்.

ஐ. வலதுபுறம் - வில் போட்டியில் வெற்றி பெறும் ராமன் - ராமனும் சீதையும் ஒன்றாக அமர்ந்திருத்தல்.

**கிழக்கு**

ஒ. இடதுபுறம் - கருடன் மீது விஷ்ணு, கிருஷ்ணன் அசுரனைக் கொன்று மணிப்பர்வத மலையைக் கொண்டு வருதல். அவனுடைய படை அரக்கனின் பிணத்தைச் சுமந்து வருதல்.

ஓ. நடுவில் கதவுக்கு மேலே - கூட்டுச் சேர்வதற்கு விவாதம், வலது புறம் . ராமனும், லட்சுமணனும், இடது புறம் - குரங்கு மன்னன் சுக்ரீவன்.

ஔ. வலதுபுறம். ஆதிசேஷன் மீது சாய்ந்திருக்கும் விஷ்ணு. மேலே - அப்ரஸ்கள்.

கீழே - வாகனங்கள் மீது 9 கடவுள்கள்.

1. குதிரைகள் இழுக்கும் தேரில் சூரியன்
2. யக்ஷினின் தோள் மீது நிற்கும் குபேரன்.
3. அன்னத்தின் மீது பிரம்மா.
4. மயில் மீது ஸ்கந்தன்.



5. குதிரை மீது வீற்றிருக்கும் அடையாளம் தெரியாத இந்துக் கடவுள்
6. மூன்று தலை யானை மீது இந்திரன்.
7. எருது மீது எமன்
8. காளை மீது சிவன்
9. சிங்கம் மீது வீற்றிருக்கும் அடையாளம் தெரியாத இந்துக் கடவுள்.

மேற்கு அரங்கு

**இலங்கைப் போர்**

ராமனுக்கும், பத்துத் தலைகளும் 20 கரங்களும் கொண்ட இராவணனுக்கும் நடைபெறும் யுத்தக் காட்சி.

நடுவுக்கு அருகில் அங்கோர் வாட்டின் மிக அழகிய பேஸ் சிற்பங்கள்.

இலங்கையில் போர் நடைபெறுகிறது. ராவணன் தோற்றுப் போகிறான். சிறை பிடிக்கப்பட்ட சீதை. ராட்சசர்களோடு பேரரிடும் குரங்குகள்.

**நடுவின் முடிவில்**

அம்புகள் சூழ சுக்ரீவன் தோள் மீது நின்றிருக்கும் ராமன் அருகில் லட்சுமணன், அரக்கன் அருகில் பத்துத் தலைகளோடும், 20 கைகளோடும் ராவணன் சிங்கங்கள் இழுக்கும் தேரில் வீற்றிருத்தல். இரண்டு சிங்கத் தலை மீது சாய்ந்திருக்கும் பானம் கட்டிய நளன் என்ற குரங்கு. குரங்கு ஒருவன் உடலை கடித்துத் தூக்கி எறிதல். யானையின் தந்தத்தை கிழித்து, எறியும் குரங்கு.

**சிற்பங்களில் அவதாரங்கள்**

பத்துத்தலை இலங்கையர்கோன் கயிலை மலையைத் தன் தோள்களால் தூக்கும் காட்சி செதுக்கப்பட்டிருக்கிறது. இராவணன் சிறந்த சிவ பக்தன். தினமும் சிவபெருமானை வழிபடக் கயிலைமலை செல்பவன். அப்படித் தினமும் கயிலை மலைக்குச் சென்றுவரச் சிரமமாக இருந்ததால், கயிலை மலையைப் பெயர்த்து இலங்கைக்கே கொண்டு வந்து விடலாம் எனத் தீர்மானித்தான். அவன், கயிலை மலையைப் பெயர்க்க, சிவபெருமான் தன் கால் பெரு விரலால் மலையை அழுத்தினார். மலைக் கடியில் அகப்பட்டுக் கொண்ட இராவணன், இறைவனுக்குப் பிடித்தமான சாமகானத்தைப் பாடி சிவபெருமானின் மனம் குளிரச் செய்து தன்னை மீட்டுக் கொண்டான். அத்தகைய தோள் வலிமை கொண்டவன் இராவணன்.

வாரணம் பொருத மார்பும்,
வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவர்க்கு ஏற்ப
நயம்பட உரைத்த நாவும்
தாரணி மவுலி பத்தும், சங்
கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு
வெறுங்கையோட இலங்கை
புக்கான்.

'வாரணம் பொருத மார்பன்' எனும் போது எட்டு திசைகளையும் காக்கும் யானைகளோடு மோதிப் போரிட்டு, அதனால் அவற்றின் தந்தங்கள் தனது மார்பில் புக, அவற்றை அப்படியே ஒடித்து விட்டு மார்பில் தந்தங்கள் பதியப் பெற்ற பெருமையை உடையவன். கயிலை மலையை அசைத்த தோள் வலிமை உள்ளவன். நாரத முனிவன் 'நன்று நன்று' என்று ஏற்குமாறு சாமவேதத்தை இசை நயத்தோடு பாடிய நாவும், பத்துத் தலைகளில் அணிந்திருந்த அரச சின்னமான மணிமுடி பத்தும், சிவபிரான் தவ ஆற்றல் கண்டு கொடுத்த வாளும் கொண்டவன் இராவணன். இத்தனை பெருமைகளையுடைய இராவணன், தன்னிடம் என்றும் நீங்காமல் இருந்த வீரத்தை, போர்க்களத்திலே போட்டு விட்டு வெறுங்கையனாகத் திரும்பிப் போகிறான் என்று கம்பர் வர்ணிக்கிறார். அந்தக் காட்சியைச் சிற்பமாக வடித்திருக்கிறார்கள்.

இராவணனின் சிற்பத்துக்கு அருகே, இராம - இராவண யுத்தத்தில் வில் அம்பு தொடுக்கும் இராமனைச் செதுக்கியிருக்கிறார்கள்.

வடக்குப் புறத்திலே இந்து சமயத்தின் புராணக் கதைகளிலே கூறப்படும் தேவ அசுரர்களின் யுத்தங்களும் அதற்கு அருகிலே கிருஷ்ண பரமாத்மா மேற்கொண்ட, மகாபலியின் புத்திரனான பானசூரனின் வதமும் சித்திரிக்கப்பட்டுள்ளன. கிழக்குப் புறத்தில் தேவ அசுரர்கள் திருப்பாற்கடலைக் கடையும் காட்சி பெரிய அளவில் செதுக்கப்பட்டுள்ளது. மேலும், பல அசுரர்களை கிருஷ்ணன் வதம் செய்த காட்சிகளும் கிழக்கிலே அமையப் பெற்றுள்ளன.

சுவர்க்கம் - நரகத்தினை பிரதிபலிக்கும் சிற்பங்கள் தெற்கிலே செதுக்கப்பட்டுள்ளன. இன்னுமோர் தொகுதியிலே மன்னர் இரண்டாம் சூரியவர்மனின் சிற்பம் உள்ளிட்ட கம்போஜ வரலாற்றினைக் குறிக்கும் பல சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன.

அங்கோர் கோயிலின் அனைத்துச் சிற்பத் தொகுதிகளிலும் 'அப்சரஸ்' எனும் இரண்டாயிரத்திற்கும் அதிகமான தெய்வ மங்கையர்களைப் பார்க்கலாம். சுவர்களின் ஒவ்வொரு அங்குலத்தையும் சிற்பங் களால் நிறைத்திருக்கிறார்கள். அனைத்திலும் பிரமாண்டம் தொனித்தது.

தேவ - அசுரர்கள் வாசுகிப் பாம்பால் திருப்பாற்கடலைக் கடையும் காட்சி ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்கு வியாபித்திருக்கிறது. பாம்பின் ஒருபுறம் இராவணனின் தலைமையில் 92 அசுரர்களும் மறுபுறம் 88 தேவர்களும் செதுக்கப்பட்டிருக்கிறார்கள். இராவணனும் சேர்ந்து திருப்பாற்கடலைக் கடையும் காட்சி புதுமையாக உள்ளது!

அங்கோர் கோயிலின் 5 மில்லியன் நிறைக்கும் அதிகமான கற்கள் பாவித்திருக்கின்றார்கள். அதிசயம் என்னவென்றால் இக்கற்கள் 50 கிலோ மீற்றர் தொலைவிற்கு அப்பாலுள்ள Lichi என்னும் மலையிலிருந்து வெட்டியெடுக்கப்பட்டுள்ளன. 'சியாம் ரீப்' நதியோட்டத்தைப் பயன்படுத்தி மலைப்பகுதியிலிருந்து 'அங்கோர்' இடத்திற்கு நகர்த்தியிருக்கிறார்கள். இதற்காக ஏழாயிரத்திற்கும் அதிகமானப் படகுகளையும் ஐயாயிரத்திற்கும் அதிகமான யானைகளையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். பத்து லட்சம் தொழிலாளிகள், ஐநூற்றுக்கும் அதிகமானோரின் தலைமையில் பணிபுரிந்திருக்கிறார்கள் என ஒரு வரலாற்றுப் பதிவு கூறுகிறது.

**அங்கோரில் இந்து மதக் கடவுள்கள்**

இந்துமத கோயில்கள் மிகவும் அதிகமானவை; சிக்கலானவை. முக்கியமாக கடவுள்களின் குணாதிசயங்களைத் தெரிந்து கொள்வது ஆங்கோரிலுள்ள கடவுள்களை அடையாளம் காணவும், அவைகளைப் பற்றிய பாராட்டுதலை உயர்த்தவும் ஏதுவாக இருக்கும். கெரில் உள்ள கடவுள்கள் அழிவில்லாத இளமை கொண்டவை. இருந்தாலும் அழகானவை. அவைகள் நிர்வாணமாக இல்லாமல் அமர்ந்தும் நிற்கும் அல்லது சாய்ந்தும் அமைந்திருந்தன. சாந்தமான முகபாவத்தை அன்றி வேறு எந்த உணர்ச்சிகளையும் அவைகளின் முகங்கள் பிரதிபலிக்கவில்லை. ஆகையால், அடையாளங்களை முகங்கள் காட்டவில்லை, மற்ற தோற்றங்களே காட்டின. கடவுளின் பெண் சக்தியை பிரதிபலித்தவாறு காட்சியளிக்கும் கடவுளின் மனைவி வடிவம் சில சமயம் கடவுளை அடையாளம் காண உதவுகிறது. கடவுள்கள் ஏந்தியிருக்கும் பொருள்களும், ஆயுதங்களும், அவர்கள் சவாரி செய்யும் மிருகங்களும் மற்றைய சிறப்புக்குரிய அம்சங்கள்.

கெமர் கலைகளில் கடவுள்கள் ஏந்தியிருக்கும் சில பொருள்களும் அவைகளின் பண்புகளும் கீழே விவரிக்கப்பட்டுள்ளன. தடி அல்லது தண்டாயுதம் கீழ் பகுதி குமிழ் வடிவாகவும் மேல் பகுதி மெலிந்



தும் காட்சியளிக்கும். இது நெருக்கமான மோதலின் போது பயன்படுத்தப்படுவது. சங்கு, சின்ன சக்கரம் இது நுட்பமாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். இது உலகின் சுழற்சியையும், சக்தியையும் குறிக்கிறது. புத்த மதத்தில் விதியின் சக்கரம் உள்ளது. சின்ன பிடியுள்ள குச்சியுடனும், கூரான கொக்கியுடனும் யானைக்கடவுள் காட்சியளிக்கிறது. சாமரம், இந்து கடவுள்களும் புத்த கடவுள்களும் பயன்படுத்திய மணிகள் இணைக்கப்பட்ட ஜெப மாலை. முழுமையான உண்மையைக் குறிப்பதும், தீமைகளை அழிக்கும் சக்தி கொண்டதுமான திரிசூலம். வட்டமான வடிவத்துடன் தீ நாக்குகள் எழும்பும் அகண்ட வாய் கொண்ட குடுவை, இது வாழ்க்கை என்ற தண்ணீர் நிரம்பிய பாத்திரத்தைக் குறிக்கிறது.

முக்கியமான கடவுள்களும், மற்றுமுள்ள புராண கடவுள்களும் அவைகளின் குறியீடு, பண்புகளும் கீழே தரப்பட்டுள்ளன. இவைகள் வழிகாட்டும் முறை மட்டுமே, எந்த கடவுளும் குறிப்பிடப்பட்டுள்ள தோற்றத்தோடு எப்போதும் இருந்ததில்லை. கெமர் கலைகளில் கடவுளின் ஒரு குறிப்பிட்ட வடிவம் சித்தரிக்கப்பட்டிருக்கும். அந்த கடவுள் வேறு ஒரு தோற்றத்தில் காட்சியளிக்கும்போது குறியீடுகள் மாறுகின்றன.



(தொடரும்)

# சிறுவர் பொய்கை



## விடுகதைகளும் விடைகளும்



1. அடி மலர்ந்து நுனி மலராத பூ எது?
2. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும் அது என்ன?
3. காக்கைப் போலக் கறுப்பானது, கையால் தொட்டால் ஊதா நிறம், வாயால் மென்றால் நீல நிறம் அது என்ன?
4. தாடிக்காரன், மீசைக்காரன். கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன் அது என்ன?
5. சிவப்புப் பைக்குள் சில்லறை கொட்டிக் கிடக்குது அது என்ன?
6. காற்றிலே பறக்கும் கண்ணாடி குண்டு, தொட்டுவிட்டால் பார்க்க முடியாது அது என்ன?
7. ஐந்து அடுக்கு நான்கு இடுக்கு அது என்ன?
8. ஒற்றைக் காலில் ஒய்யாரமாய் ஆடுவான். ஓய்ந்து விட்டால் படுத்துவிடுவான் அவன் யார்?
9. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன?
10. நடைக்கு உதாரணம் சொல்வார்கள். ஆனால் குறுக்கே நடந்தால் சிலருக்கு பிடிக்காது. அது என்ன?

### விடைகள்

1. வாழைப்பூ 2. பேனா 3. நாவல் பழம் 4. தேங்காய் 5. காய்ந்த மிளகாய் 6. நீர்க்குமிழி 7. விரல்கள் 8. பம்பரம் 9. கிளி 10. பூனை

**பசியுடன் இருக்கும் முயலுக்கு கரட் உண்ண வழிகாட்டுங்கள்...**



## நிறம் தீட்டலாம் வாங்க





# கல்விக் கதிர் வெளியீடு

## இலங்கை தொடர்பான பொது அறிவு வினா - விடைகள்



**1. இலங்கை எத்தனை மாகாணங்களாக பிரிக்கப்பட்டுள்ளன?**
**9 மாகாணங்கள்**

1. வடக்கு மாகாணம்
2. கிழக்கு மாகாணம்
3. வடமத்திய மாகாணம்
4. வடமேல் மாகாணம்
5. மத்திய மாகாணம்
6. சப்ரகமுவ மாகாணம்
7. ஊவா மாகாணம்
8. தென் மாகாணம்
9. மேல் மாகாணம்

**2. இலங்கையின் தேசிய சின்னங்கள்**

★ இலங்கையின் தேசிய மரம் - நாகமரம்

★ இலங்கையின் தேசியப் பறவை - காட்டுக்கோழி.

★ இலங்கையின் தேசிய மிருகம் - யானை

★ இலங்கையின் தேசிய மலர் - நீலஅல்லி

**3, இலங்கையில் எத்தனை அரச சேவை மாவட்டங்கள் உள்ளன?**
**25 மாவட்டங்கள்**

1. கொழும்பு
2. கம்பகா
3. களுத்துறை
4. கண்டி
5. மாத்தளை
6. நுவரெலியா
7. காலி
8. மாத்தறை
9. அம்பாந்தோட்டை
10. யாழ்ப்பாணம்
11. மன்னார்
12. வவுனியா
13. முல்லைத்தீவு
14. கிளிநொச்சி
15. மட்டக்களப்பு
16. அம்பாறை
17. திருகோணமலை
18. குருநாகல்
19. புத்தளம்
20. அனுராதபுரம்
21. பொலன்னறுவ
22. பதுளை
23. மொனராகலை
24. இரத்தினபுரி
25. கேகாலை

**4. இலங்கையின் தலைப்பட்டினம் எது?**
ஸ்ரீ ஜயவர்தனபுர

**5. இலங்கையின் பெரிய நகரம் எது?**
கொழும்பு

**6. இலங்கையின் பரப்பளவு என்ன?**
65,610 கிமீ / 25,332 சதுரமைல்

**7. இலங்கை எப்போது சுதந்திரம் பெற்றது?**
04.02.1948 இல்

**8. இலங்கையில் உயர்ந்த நீர்வீழ்ச்சி எது?**
பம்பரகந்த.

**9. இலங்கையில் நீளமான ஆறு எது?**
மகாவலி கங்கை 335 கிலோ மீற்றர்

**10. இலங்கையின் உயர்ந்த மலை எது?**
பிதுருதலாகல (Pidurutalagala) கடல் மட்டத்திலிருந்து 2524 மீற்றர் (8200 அடி

**11. இலங்கையில் பாவனையில் உள்ள நாணயம்?**
இலங்கை ரூபாய் (LKR)



### தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்'
சிறுவர் சஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.


# துண்டாடப்படுகின்றது 'டாண்' கேபிள்

யாழ்ப்பாணம், ஜூன் 07

யாழ்.குடாநாட்டின் பல இடங்களிலும் உள்ள டாண் தொலைக்காட்சியின் கேபிள் இணைப்புக்கள் நேற்றுமுன்தினம் காலை முதல் இலங்கை மின்சாரசபையினால் அதிரடியாக அகற்றப்பட்டு வருகின்றன.

டாண் தொலைக்காட்சி தனது போட்டி நிறுவனமான யூ.எஸ்.கேபிள் நிறுவனத்தினரைசிக்கவைக்கதிட்டமிட்டு தாக்குதல் நாடகத்தை அரங்கேற்ற பதிலுக்கு யூ.எஸ். கேபிள் நிறுவனம் இலங்கை மின்சாரசபை மூலம் தொலைக்காட்சி கேபிள்களை அறுத்தெறிய வைத்துள்ளது.

இதனிடையே யூ.எஸ். கேபிள் நிறுவனத்தின் கேபிள்கள் வெட்டி துண்டாடப்பட்




டுள்ளன என அச்சுவேலி காவல் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

யாழில் கேபிள் இணைப்புகளை வழங்கிவரும் யூ.எஸ். கேபிள் நிறுவனத்தின் கேபிள் இணைப்புக்கள் இனந்தெரியாத நபர்களினால் வெட்டி சேதப்படுத்தப்பட்டுள்ளன என யூ.எஸ்.கேபிள் நிறுவனத்தின் இயக்குநர் துசியந்தன் (சூட்டி) என்பவரால் அச்சுவேலி காவல் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

யாழில் சட்டவிரோத கேபிள் இணைப்புகளை வழங்கும் நிறுவனங்கள் மீது இலங்கை தொலைத்தொடர்பு ஆணைக்குழுவினால் யாழ். நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு இடம்பெற்று வரும் நிலையில் கேபிள் துண்டிப்பு நடந்துள்ளது.

இந்த நிலையில் அண்மையில் வடமராட்சி கரணவாய் பகுதியில் டாண் தொலைக்காட்சியின் கேபிள் வழி ஏற்பட்ட மின்னொழுக்கினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மகனென இருவர் பரிதாபகரமாக உயிரிழந்திருந்தனர்.

துண்டித்து வீசப்பட்டிருந்த டாண் தொலைக்காட்சியின் கேபிள் வழி மழையின் போது மின்னொழுக்கு ஏற்பட்டிருந்தமையே மரணத்திற்கு காரணமென சொல்லப்பட்டிருந்தது.

எனினும், டாண் தொலைக்காட்சி பினாமி குகநாதன் ஜனாதிபதியின் பிரத்தியேக இணைப்பாளர் எனும் பெயரை பயன்படுத்தி காவல்துறையிடமிருந்து தப்பித்துமிருந்தார்.

இந்த நிலையினில் குறித்த விவகாரம் மின்சக்தி அமைச்சர் வரை சென்றிருந்த நிலையில் தற்போது மின்கம்பங்கள் ஊடாக முறையற்ற வகையில் இணைக்கப்பட்டிருந்த டாண் தொலைக்காட்சி கேபிள்கள் நேற்றுமுன்தினம் முதல் துண்டிக்கப்பட்டு வருகின்றன.

நன்றி: பதிவு இணையத்தளம்

### 'என்டர்பிரைஸஸ் ஸ்ரீலங்கா' மூலம்

# 50 ஆயிரம் தொழில் வாய்ப்பு

அரசு நடைமுறைப்படுத்தும் என்டர்பிரைஸஸ் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு மாவட்ட மட்டங்களில் கண்காட்சிகளை நடத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மஹரகம அபேக்ஷா வைத்திய சாலைக்கு எம்.ஆர்.ஐ இயந்திரத்தையும், கண்டி போதனா வைத்திய சாலைக்கு பெட்ஸ்கேனர் இயந்திரத்தையும் துரிதமாக வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருக்கிறது என நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும் அமைச்சரவை துணைப்பேச்சாளருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரும் அமைச்சரவை துணைப்பேச்சாளரும் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

2017 மற்றும் 2018ம் ஆண்டு



வரவு செலவு திட்ட யோசனைகளுக்கு அமைவாக அரச மற்றும் தனியார், வெளிநாட்டு நிதி வசதியளிக்கும் நிறுவனங்கள் மற்றும் ஏனைய ஒத்துழைப்பு நிறுவனங்களுடன் இணைந்து நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சினால் 'என்டர்பிரைஸஸ் ஸ்ரீலங்கா' வட்டி நிவாரண கடன் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் 16 திட்டங்களுக்கு சலுகை கடன் வசதிகள் வழங்கப்படுகின்றன. அதனடிப்படையில், இது வரை 12,405 பயனாளிகளுக்கு 30 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை வழங்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தினை மேலும் மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தும் நோக்கில், அரசின் ஏனைய அபிவிருத்தி வேலைத் திட்டங்களுடன் இணைந்து அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் 03 மாதங்களுக்கு ஒருமுறை தேசிய மட்டத்தில் கண்காட்சியொன்றை '2025 தூர நோக்கு' தலைப்பின் கீழ் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்வதற்காக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சினுள் செயலகம் ஒன்றை நிர்மாணிப்பது தொடர்பில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அமைச்சரவை துணைப்பேச்சாளர் குறிப்பிட்டார்.

(சு)

## அம்பாந்தோட்டையில் விசேட பொருளாதார வலயம்

கொழும்பு, ஜூன் 07

சீன அரசின் ஒத்துழைப்புடன் விசேட பொருளாதார வலயமொன்றை அம்பாந்தோட்டையில் ஸ்தாபிப்பதற்கு அரசு திட்டமிடப்பட்டது.

அதற்காக சீன அரசின் மூலம் வைனா இன்ஜினியரின் கோபரேன் நிறுவனம் என பெயரிடப்பட்டுள்ளது.

இதன் கீழ் அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் இலங்கை மற்றும் சீனா வழங்கல் மற்றும் கைத்தொழில் வலயங்களை ஸ்தாபிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை 03 கட்டங்களின் கீழ் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அம்பாந்தோட்டை பிரதேசத்தினை மிகவும் திட்டமிடப்பட்ட நகர அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெறுவதனை உறுதி செய்வதற்காக அம்பாந்தோட்டை மாவட்டத்திற்காக பிரதான திட்டமொன்றை தயாரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கான ஆலோசனை சேவை நிறுவனமொன்றை நியமித்து கொள்வதற்கும், அவ்வேலைத்திட்டத்தினை ஒருங்கிணைப்பு செய்யும் பணியினை மேற்கொள்ள வேலைத்திட்ட முகாமைத்துவ பிரிவொன்றை நியமிப்பதற்கும் மற்றும் அதற்கு அவசியமான வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்குமாக இளைஞர் விவகார, வேலைத்திட்ட முகாமைத்து மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(சு)

## பல்கலை பகிடிவதையை கட்டுப்படுத்த கைத்தொலைபேசி செயலி அறிமுகம்

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதையை கட்டுப்படுத்துவதற்காக கைத்தொலைபேசி செயலி (APP) வகையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிமுகம் செய்துள்ளது.

பகிடிவதையை கட்டுபடுத்தும் பொறுப்பு உபவேந்தர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் ஆகியோரை சாரும் என்று அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புதிய தொலைபேசி (app) அறிமுகம் செய்யும் நிகழ்வில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்சமயம் பகிடிவதை மிலேச்சத்தனமானதாக மாறியிருக்கிறது. சிலரின் பாலியல் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் ஆயுதமாக இது மாறியிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆண்டில் பகிடிவதை தொடர்பான 280 சம்பவங்கள் பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான பகிடிவதையினால் அதிகளவிலான மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் இணைந்து கொள்ள விரும்புவதில்லை என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பகிடிவதை காரணமாக சில மாணவர்கள் பல்கலைக் கழகங்களை விட்டு இடையில் விலகிச் செல்கிறார்கள் . சில மாணவர் அமைப்புக்களும் பொறுப்பற்ற விதத்தில் சட்டவிரோதமான முறையில் செயற்பட்டு வருகின்றன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# சாதாரண தரப் பரீட்சையில் சுகாதாரத்தை கட்டாய பாடமாக்குவது குறித்து தீர்மானம்

இலங்கையில் வருடாந்தம் இடம்பெறும் மரணங்களில் சுமார் 75 சதவீதமானவை தொற்றாநோயின் காரணமாக ஏற்படுவதாக புதிய புள்ளிவிவர அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் 72.5 சதவீதமான மக்கள் காய்கறி மற்றும் பழவகைகளை போதுமான அளவு உணவில் சேர்த்துக்கொள்வதில்லை என்றும் பெண்களில் சுமார் 44 சதவீதமானோர் உடற்பயிற்சியில் ஈடுபடுவதில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

சுகாதாரம் தொடர்பான சரியான அறிவின்மையே இதற்கான மிக முக்கிய காரணமாகும். இந்த நிலைமையை தவிர்க்கும் வகையில் சுகாதார வாழ்க்கை முறையைக் கொண்டநாடாக முன்னெடுப்பதற்கு சுகாதாரம் தொடர்பில் சரியான தெரிவு இருப்பது அவசியமாகும்.

இதனால் சுகாதாரம் தொடர்பில் மக்கள் மத்தியில் அறிவுறுத்துவது அத்தியாவசிய ஒன்றாக மாறியுள்ளது.

இதற்காக தற்பொழுது பாடசாலை கற்கைநெறி சிபார்சிற்குள் தரம் ஆறிலிருந்து தரம் 9 வரையில் மாத்திரம் சுகாதார பாடத்தினை கட்டாயக் கற்கை நெறியாக கற்பிக்கப்படவுள்ளதுடன் இப்பாடம் கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையில் கட்டாயமாகக் கொள்ளப்பட மாட்டாது.

அதனடிப்படையில், குறித்த பாடத்தினை க.பொ.த. சாதாரண தரபரீட்சைவிடய பரப்பில்கட்டாய பாடமாக மாற்ற வேண்டும் என்று சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன முன்வைத்த யோசனைகளை 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள பாடத் திட்ட சீர்திருத்தத்தின் போது இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் என கல்வி மறு சீரமைப்புக்கான அறிஞர் குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள சிபார்சுகளையும் கவனத்திற் கொண்டு, பாடசாலை பாடப்பரப்பு திருத்தங்கள் தொடர்பான கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தினை கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் சிபார்களையும் பெற்றுக் கொண்டதன் பின்னர் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### சிங்கப்பூர் சென்ட்டோசா தீவிலுள்ள

# கேபெல்லா ஹோட்டலில் ட்ரம்ப் - கிம் சந்திப்பு

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஆகியோர் சிங்கப்பூரின் சென்ட்டோசா தீவில் கேபெல்லா ஹோட்டலில் சந்தித்து பேச்சு நடத்த வள்ளனர் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.




வட கொரியாவும் அமெரிக்காவும் நிரந்தர பகை நாடுகளாக உள்ளன. அமெரிக்காவை அணுகுண்டு வீசி தாக்கப்போவதாக வடகொரியா ஜனாதிபதி கிம்ஜாங் உன் அடிக்கடி மிரட்டிவந்தார். சீனா-தென் கொரியா நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக கிம் ஜாங் அன் தனது மிரட்டல் போக்கை கைவிட்டு அமெரிக்காவுடன் சமரசமாகச் செல்ல முன்வந்தார்.

எதிர்வரும் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும், கிம்ஜாங் உன்னும் சந்தித்து பேச உள்ளனர் என அறிவிக்கப்பட்டது. ஆனால் அதன்பின், கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் இந்த சந்திப்பு நடைபெறுமா என்பதில் சந்தேகம் நீடித்து வந்தது.

திட்டமிட்டபடி வரும் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் சந்திப்பு நடைபெறும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

இதையடுத்து, அவர்கள் சந்திப்புக்கான நேரம் முடிவு செய்யப்பட்டுள்ளது என அமெரிக்க ஜனாதிபதி மாளிகை அறிவித்தது. 12 ஆம் திகதி சிங்கப்பூர் நேரப்படி காலை 9 மணிக்கு இந்தச் சந்திப்பு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையே, சிங்கப்பூரில் உள்ள ஷாங்ரி-லா ஹோட்டலில் இந்த சந்திப்பு நடைபெறலாம் என சிங்கப்பூர் அரசின் இணைய தளம் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் வடகொரியா ஜனாதிபதி கிம்ஜாங் அன் ஆகியோர் சிங்கப்பூரில் உள்ள சென்ட்டோசா தீவில் கேபெல்லா ஹோட்டலில் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர் என வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் டுவிட்டரில் கூறுகையில்–

இந்தச் சந்திப்புக்கு உறுதுணையாக உள்ள சிங்கப்பூர் அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என பதிவிட்டுள்ளார்.

# பாதுகாப்புக்கு கூர்க்கா வீரர்கள்

சிங்கப்பூர்சிற்றி, ஜுன் 07

சிங்கப்பூரில் எதிர்வரும் 12 ஆம் திகதி அமெரிக்கா - வடகொரியா ஜனாதிபதிகள் பேச்சு நடப்பதால் பாதுகாப்புப் பணிகளுக்காக கூர்க்கா வீரர்கள் அமர்த்தப் பட்டுள்ளனர்.

இந்தியாவில் மேற்கு வங்காளம் மற்றும் அதை ஒட்டி உள்ள பகுதிகளில் கூர்க்கா இன மக்கள் வசித்து வருகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் நாடு முழுவதும் சென்று காவல் பணிகளையே செய்வது வழக்கம்.

மேலும், இந்திய ராணுவத்திலும் கூர்க்கா படை என்ற தனிப் பிரிவு செயற்படுகிறது. அவர்கள் காவல் பணிகளில் மிகவும் திறமையாக இருக்கின்றமையால் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த பணிகளை செய்ய வைக்கின்றனர்.

இதேபோல சிங்கப்பூரிலும் கூர்க்கா வீரர்களுக்கு முக்கியமான பணிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிங்கப்பூரில் இந்தியர்கள் குடியேறியபோது அங்கு பாதுகாப்புப் பணிகளுக்காக கூர்க்கா வீரர்களும் அழைத்து செல்லப்பட்டார்கள்.




அவ்வாறு சென்றவர்கள் பல்லாயிரக்கணக்கானோர் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு மவுண்ட் வெர்னான் என்ற இடத்தில் தனி குடியிருப்பு பகுதி உள்ளது. இந்த குடியிருப்புக்கு மற்றவர்களை அனுமதிப்பது இல்லை.

கூர்க்கா வீரர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து சிங்கப்பூர் பொலிஸ் வேலை வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. தற்போது 1,800 கூர்க்கா வீரர்கள் சிங்கப்பூர் பொலிஸில் பணியாற்றி வருகிறார்கள்.

எதிர்வரும் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பு, வடகொரிய ஜனாதிபதி கிம்ஜாங் உன் ஆகியோரிடையே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேச்சு நடைபெறுகிறது.

இரு நாடுகளும் நீண்ட காலமாக கடுமையான எதிரி நாடுகளாக இருந்து வந்த நிலையில் இப்போது பேச்சு நடைபெற உள்ளது. எனவே அங்கு அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடந்து விடக்கூடாது என்பதற்காக சிங்கப்பூர் அரசு விழிப்புடன் செயற்பட்டு வருகிறது.

கூர்க்கா வீரர்கள் மிகவும் விழிப்புடன் இருந்து கண்காணிப்பார்கள் என்பதால் அவர்களை இந்த பணிகளில் அமர்த்தப்படுவர் என தெரிய வந்துள்ளது. (கு)

# மீண்டும் வெடித்துச் சிதறியது கவுதமலா பியூகோ எரிமலை

## உயிரிழந்தோர் எண்ணிக்கை 72 ஆக உயர்வு

கவுதமாலா நாட்டில் பியூகோ எரிமலை வெடித்து சிதறியதில், பலியானோர் எண்ணிக்கை 72 ஆக உயர்ந்துள்ளது. நேற்றுமுன்தினம் மீண்டும் வெடித்து சிதறியதால் மீட்பு பணியில் தொய்வு ஏற்பட்டது.

மத்திய அமெரிக்க நாடு களில் ஒன்றுகவுதமாலாவில் உள்ள பியூகோ என்ற எரிமலை கடந்த ஞாயிற்றுக்கிழமை வெடித்துச் சித றியதில் எரிமலைக் குழம்புகளும், சாம்பல் துகள்களும் பரவின. ஏராள மான வீடுகளை எரிமலை குழம்புகள் மற்றும் சாம்பல் சூழ்ந்ததால் பொது மக்கள் சிக்கிக்கொண்டனர்.



எங்கு பார்த்தாலும் சாம்பல் புகை சூழ்ந்து காணப்பட்டது. சுமார் 10 கிலோமீற்றர் தொலைவுக்கு சாம் பல் புகை பரவியது. கவுதமாலா சர்வதேச விமான நிலையம் உடனடி யாக மூடப்பட்டது.

கடும் சவால்களுக்கு மத்தி யில் தேசிய பேரிடர் மீட்பு படையினர் மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். எரிமலையை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் பொது மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த எரிமலை வெடிப்பினால் நேற்று முன்தினம் வரை 69 பேர் உயிரிழந்தனர் என தகவல் தெரிவிக்கப்பட்டது. பலர் இன்னும் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

நேற்றுமுன்தினம் மீட்பு பணியின்போது மேலும் 3 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. இதன்மூலம் உயிரிழப்பு 72 ஆக உயர்ந்துள்ளது.

இந்த சூழ்நிலையில் நேற்றுமுன்தினம் மீண்டும் எரிமலை வெடித்து சாம்பல் துகள்களை கக்கத் தொடங்கியது. இதனால் மீட்புப் பணியை மேற்கொள்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டது. (கு)

# வாக்குச் சீட்டு மூலமே தேர்தலை நடத்த வேண்டும்

## அமெ. முன்னாள் ஜனாதிபதி கிளிண்டன் யோசனை

முறைகேடுகளை தடுப்பதற்காக வாக்குச் சீட்டு மூலம் தேர்தலை நடத்த வேண்டும் என்று அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கிளிண்டன் கூறியுள்ளார்.

இந்தியாவில் நீண்ட காலமாக எலெக்ரோனிக் வாக்கு எந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் முறைகேடு நடக்கின்றன என்றும் மீண்டும் வாக்குச் சீட்டு முறைக்கே மாற வேண்டும் என்று பல எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இப்போது இதே போன்ற கோரிக்கை அமெரிக்காவிலும் எழுந்துள்ளது. 2016 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

இந்த தேர்தலில் டொனால்ட் ட்ரம்பும், முன்னாள் ஜனாதிபதி கிளிண்டனின் மனைவி ஹிலாரி கிளிண்டனும் போட்டியிட்டனர். தேர்தலில் ஹிலாரி கிளிண்டன் தான் வெற்றி பெறுவார் என்று கருத்து கணிப்புகள் கூறின. ஆனால் யாரும் எதிர்பாராத வகையில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார்.

ஹிலாரி கிளிண்டன் வெற்றி பெறுவதை விரும்பாத ரஷ்யா, வாக்குப்பதிவு கணினிகளை ஹேக்கிங் செய்து வாக்குகளை ட்ரம்புக்கு ஆதரவாக மாற்றிவிட்டதாக குற்றம்சாட்டப்பட்டு வருகிறது. இதை ரஷ்யா மறுத்துள்ளது. ஆனாலும் சந்தேகம் நீடித்து வருகிறது.

அமெரிக்காவில் 50 மாகாணங்கள் உள்ளன. அங்கு நாடு முழுவதும் ஒரே முறையில் தேர்தல் நடத்தப்படுவது இல்லை. தேர்தலை எப்படி நடத்துவது என்பது குறித்து அந்தந்த மரீகாணங்களே முடிவு செய்து கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளது.

இதன்படி சில மாகாணங் களில் வாக்குச் சீட்டு முறை உள்ளது. சில மாகாணங்களில் வாக்கு எந்திரங்களை பயன்படுத்துகிறார்கள். இன்னும் சில மாகாணங்களில் கணினி மூலம் இணையதளம் வழியாக வாக்குப் பதிவு செய்யும் நடைமுறையை பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறு 30 மாகாணங்களில் கம்ப்யூட்டர் வாக்குப்பதிவு முறை நடைபெற்றது. இதில் தான் 21 மாகாணங்களில் கம்ப்யூட்டரில் வைரஸ்களை அனுப்பி ஹேக்கிங் செய்து மோசடி செய்துவிட்டதாக கூறப்படுகிறது.

எனவே இந்த மோசடி நடக்காமல் இருக்க மீண்டும் வாக்கு சீட்டு முறைக்கு வரவேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி பில்கிளிண்டனும் இப்போது அந்த கோரிக்கையை வலியுறுத்தி இருக்கிறார்.


இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில் –

எலெக்ரோனிக் சாதனங்கள் மூலம் வாக்குப் பதிவு செய்வதில் பாதுகாப்பு உள்ளது என்பதை உறுதி செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அதில் தவறு நடப்பதற்கு பல்வேறு வாய்ப்புகள் இருக்கின்றன.

எனவே தவறே நடக்காமல் இருக்க வேண்டும் என்றால் வாக்குச் சீட்டு முறைதான் சிறந்தது. எனவே அதற்கு அனைத்து மாகாணங்களும் மாறவேண் டும். தேர்தல் சரியான முறையில் நடத்தப்பட வேண் டும் என்று அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே, எலெக்ரோனிக் வாக்கு முறைக்கு மாறி இருந்த அமெரிக்காவின் விர்ஜினியா மாகாணம் இனி வாக்குச் சீட்டு முறையை பயன்படுத்தப் போவதாக அறிவித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்றத்தை சுத்தம் செய்த நெதர்லாந்து பிரதமர்!



நெதர்லாந்து பிரதமர் மார்க் ருடே நாடாளுமன்றத்தில் தன்னையறியாமல் கையிலிருந்து சிந்திய தேநீரை, சுத்திகரிப்பாளர்கள் சுத்தப்படுத்த முன்வந்தபோதும், அவர் அதனை மறுத்து தானே சுத்தப்படுத்துவதாக முன்வந்து சுத்தம் செய்துள்ளார்.

இந்தச் செயல் பார்ப்போரை வியப்பில் ஆழ்த்தியதோடு, அனைவரும் அவருக்கு பாராட்டையும் தெரிவித்துள்ளனர்.

# தேர்தலில் காங்கிரஸுடன் இணைந்தால்தான் பா.ஜ.கவை வீழ்த்தலாம் என்கிறார் திருமாவளவன்



நாடாளுமன்றதேர்தலில்தலித் அமைப்புகள், இடது சாரிகள் கட்சிகள் காங்கிரஸ் கட்சியோடு இணைந்தால் தான் பாரதிய ஜனதாவை வீழ்த்த முடியும் என்று இப்தார் நோன்பு நிகழ்ச்சியில் திருமாவளவன் கூறியுள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் இஸ்லாமிய ஜனநாயக பேரவை சார்பில் 14 ஆவது ஆண்டாக இப்தார் நிகழ்ச்சி எழும்பூரில் நடைபெற்றது.

கட்சியின் பொருளாளர் முகமது யூசுப் தலைமையில் நடந்த நிகழ்ச்சியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன், ஆந்திராவை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அசாதுதீன் உவைசி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

இதன்பாது தொல்.திருமாவளவன் தெரிவித்தவை வருமாறு:-

நம்முடைய அழைப்பை ஏற்று வந்து உவைசி கலந்து கொண்டது பெருமை அளிக் கிறது. வரும் காலத்தில் விடுதலை சிறுத்தையோடு இணைந்து செயல்படுவோம் என்று அவர் அறிவித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. அவர் கூறியது போல 2019 இல் இந்தியாவின் பிரதமரை மாநில கட்சிகளே தீர்மானிக்கும்.

ஆனால், அவருடைய இன்னொரு கருத்தில் நான் சற்று மாறுபடுகிறேன். காங்கிரஸ் அல்லாத, பா.ஜனதா அல்லாத ஒரு பிரதமரை தேர்வு செய்வோம் என்று அவர் கூறியிருப்பதில் எனக்கு மாற்று கருத்து உள்ளது.

வரும் தேர்தலில் பா.ஜன தாவை வீழ்த்துவதற்கு மாநில கட்சிகள், மதசார்பற்ற கட்சிகள் காங்கிரஸ் மற்றும் இடதுசாரிகள் உள்பட அனைவரும் ஓரணியில் திரள வேண்டும். அதுதான் தேசத்திற்கு நல்லது. இதை உவைசி பரிசீலிக்க வேண்டும்.

விடுதலை சிறுத்தைகளை பொறுத்த வரையில் காங்கிரஸோடு கருத்து மாறுபாடு கொண்டிருந்தாலும் வரும் தேர்தலில் தலித் அமைப்புகள், இஸ்லாமிய அமைப்புகள், இடதுசாரிகள் மற்றும் தி.மு.க. போன்ற மற்ற கட்சிகள் காங்கிரஸோடு இணைந்து மதவாத சக்திகளை வீழ்த்த வேணடும் என்றே விரும்புகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நீட் தேர்வை அரசியலாக்காதீர்கள்: பொன். ராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு

நீட் தேர்வை சுய நலத்திற்காகவும் அரசியலுக்காகவும் பயன்படுத்துகின்றனர் என அரசியல் கட்சிகள் மீது மத்திய அமைச்சர் பொன். ராதா கிருஷ்ணன் குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழகத்தில் கடந்த ஆண்டு நீட் தேர்வால் மாணவி அனிதா மரணம் அடைந்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது போல இந்த ஆண்டு மாணவி பிரதீபாவின் மரணமும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது. அத்துடன், தமிழகத்தில் நீட் எதிர்ப்பு மீண்டும் தீவிரமடைந்துள்ளது.

இந்த விவகாரம் நேற்றுமுன்தினம் சட்டசபையில் எதிரொலித்தது. சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசினார்.

நீட் தேர்வில் இருந்து தமிழகத்துக்கு விலக்கு பெற வேண்டும் என்று எம்.எல்.ஏ.க்கள் வலியுறுத்தினர்.

இந்த நிலையில் நீட் தேர்வு தோல்வியால் மாணவி பிரதீபா மரணம் அடைந்தமை குறித்து மத்திய அமைச்சர் பொன் ராதா கிருஷ்ண்ன் வேதனை தெரிவித்தார்.

இது தொடர்பாக சென்னை விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த போது–

'நீட் தேர்வு தோல்வியால் மாணவி பிரதீபா தற்கொலை செய்தது மிகப்பெரும் துயரத்தை ஏறப்டுத்துகிறது.

இந்த விஷயத்தில் பெற்றோரும் ஆசிரியர்களும் குழந்தைகளுக்கு நல்வழி காட்ட வேண்டும். நீட் தேர்வை கட்சிகள் சுய நலத்திற்காகவும் அரசியலுக்காகவும் பயன்படுத்துகின்றன.

நீட் தேர்வை காரணம் காட்டி பொய்யான பிரசாரங்கள் மேற்கொள்கின்றனர்' என்று பொன்.ராதாகிருஷ்ணன் குற்றம் சாட்டியுள்ளார்.

## தூத்துக்குடியில் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு நடிகர் விஜய் சென்று ஆறுதல்



தூத்துக்குடி, ஜுன் 07

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை நடிகர் விஜய் நேரில் சென்று ஆறுதல் கூறினார்.

ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட வலியுறுத்தி கடந்த 22 ஆம் திகதி தூத்துக்குடியில் பொதுமக்கள் கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட பேரணியாக புறப்பட்டுச் சென்றனர்.

அப்போது ஏற்பட்ட கலவரத்தில் பொலிஸார் துப்பாக்கிச் சூடு மற்றும் தடியடி நடத் தியதில் 13 பேர் பலியானார்கள். 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்த நிலையில், தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்கள் குடும்பங்களுக்கு நடிகர் விஜய் நேற்று முன்தினம் நள்ளிரவில் நேரில் சென்று ஆறுதல் கூறினார். அப்போது அவர் உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு ஆறுதல் கூறியதுடன், நிதியுதவியும் அளித்துள்ளார்.

(க)

## இளைய தலைமுறையை சேர்ந்த தொழில் முனைவோர்க்கு உதவி

### இளைஞர்கள் மத்தியில் பிரதமர் மோடி

புதுடில்லி, ஜுன் 05

இந்திய அரசு இளையதலைமுறை தொழில் முனைவோர்களுக்கு உதவ பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என பிரதமர் மோடி தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மோடி டேராடூன், கவுகாத்தி மற்றும் ராய்ப்பூர் உட்பட பல நகரங்களைச் சேர்ந்த இளைஞர்கள் மத்தியில் உரையாற்றினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: –

இந்தியாவில் பல இளைஞர்கள் புதிய தொழிலை தொடங்க ஆர்வமாக உள்ளனர். ஆனால், அவர்களிடம் போதுமான பணம் இல்லாததால் தொடங்க முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

அவர்களுக்கு உதவும் வகையில் மேக் இன் இந்தியா மற்றும் டிசைன் இன் இந்தியா போன்ற திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள இளைஞர்களும் தொழில் தொடங்க ஆசைப்படுகின்றனர்.

தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் திட்டங்களில் மட்டுமல்லாமல் விவசாயத்திலும் இளைஞர்கள் முதலீடு செய்ய விரும்புகின்றனர். அவர்களுக்கு உதவும் வகையில் அரசு பல்வேறு திட்டங்களைச் செய்து வருகிறது.

இளைஞர்கள் தொழில் தொடங்குவதன் மூலம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றனர். அதற்காக அரசு 10 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தியா இளைஞர்கள் கையில் உள்ளது. அவர்களின் முன்னேற்றத்திற்காக அரசு உதவி வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கர்நாடகாவிலும் 'காலா'

ரஜனி நடிப்பில் உருவாகி இருக்கும் 'காலா' பாடத்திற்கு கர்நாடகாவில் எழுந்து வந்த சிக்கல் தீர்ந்து, 130 இற்கும் மேற்பட்ட திரையரங்குகளில் வெளியாக இருக்கிறது.

ரஜனியின் நடிப்பில் தற்போது உருவாகி இருக்கும் படம் 'காலா'. காவிரி விவகாரத்தில் தமிழகத்திற்கு ஆதரவாக ரஜனி பேசியதால், காலா படத்தை கர்நாடகாவில் வெளியிடக் கூடாது என்று கன்னட அமைப்புகள் போர்க் கொடி தூக்கின.

காலா படம் இன்று உலகம் முழுவதும் வெளியாக உள்ள நிலையில், நேற்றுமுன்தினம் கர்நாடக திரைப் பட வர்த்தக சபை தலைவர் சாரா கோவிந்த், காவிரி மேலாண்மை ஆணையம் வேண்டாம் என ரஜனிகாந்த் தெரிவிக்க வேண்டும், காவிரி விவகாரத்தில் இரு மாநில அரசுகள் – விவசாயிகள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என ரஜனிகாந்த் கூற வேண்டும் என நிபந்தனை விதித்தார்.

இந்த நிலையில் ரஜனிகாந்த் நேற்று செய்தியாளர்களை சந்தித்து, 'காலா படத்தை கன்னட அமைப்புகள் எதிர்ப்பது சரியல்ல. காலா பட விவகாரம் தொடர்பாக கன்னட அமைப்புகள் என்னை வந்து சந்திக்கலாம். காவிரி மேலாண்மை பிரச்சினையில் தீர்ப்பு என்ன இருக்கோ அதை செயல்படுத்த சொன்னேன். அதில் என்ன தவறு எனக் கேட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில் காலா படத்தை கர்நாடகாவில் சி நிறுவனம் வெளியிட இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். மேலும் கர்நாடகாவில் 130 தியேட்டர்களில் வெளியிட திட்டம் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

(க)

## பொழுதுபோக்குடன் வருமானம்...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

எமது சுதேச வைத்தியத்தில் தேன் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. நல்ல தேன் இலங்கையில் கிடைக்காததால் மேற்படி செயலூக்கம் மூலம் தேனீ வளர்ப்பாளர்களுக்குப் போதிய பயிற்சிகள் அளித்து தேனீ வளர்ப்பை ஒரு தொழிலாக இளைஞர் யுவதிகளிடையே அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகளில் ஈடுபட் டுள்ளது. தனது செயலூக்கத் திட்டத்தால் அறுபது தொன் தேனையும் நூறு மில்லியன் டொலர்கள் அந்நிய செலாவணியைப் பெறவும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. ஆகவே தேனீ வளர்ப்பாளர்கள் அரசாங்கம் தரும் அனுசரணைகளைப் பெற்று நன்மை பெறவேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

தொடர்ச்சியான நீண்டகால போரின் விளைவாக பல இன்னல்களுக்கு மத்தியில் வீடு வாசல்களை இழந்து தோட்டம் துரவுகளை இழந்து உறவுக்ளைத் தொலைத்துவிட்டு தொழில் முயற்சியின்றி வாடிக் கொண்டிருக்கின்றார்கள் எம் மக்கள். அவர்களுக்கான உதவிகளை வழங்க ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளாத நிலையில் மக்கள் தம்மிடையே வேலிச்சண்டை, எல்லைச்சண்டை, அரசியல் வாக்கு வாதங்கள் என தற்போது பல பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கின்றார்கள். ஒற்றுமையைத் தொலைத்துவிட்ட நிலையில் நாம் உள்ளோம். எமது நிலங்களை எமது தொழில்முயற்சிகளை எமக்குக் கிடைக்கவேண்டிய உரித்துக்களை கிடைக்காமல் செய்வதற்கும் கபளீகரம் செய்வதற்கும் பலருக்கும் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

எனவே எம்மிடையே காணப்படுகின்ற அரசியல் கருத்து வேற்றுமைகள், பாகுபாடுகள் எமது மக்களின் எதிர்கால வளர்ச்சிக்கு, அவர்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு இடையூறாக அமைந்துவிடாதபடி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்கொருவழி மனதிற்குப் பிடித்தமான பொழுது போக்குகளில் ஈடுபடுவது. அப்பொழுதுபோக்கு போதிய வருவாயையும் ஏற்படுத்தும் என்றால் விருப்புடன் நாம் அச் செயற்பாடுகளில் ஈடுபடலாம். தேனீ வளர்ப்பும் அவ்வாறானதொரு பொருளாதார மேம்பாட்டைத் தரக்கூடிய பொழுது போக்கு என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

தேனீ வளர்ப்பை எம் இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் பிரபல்யமடையச் செய்ய பசுமை இயக்கம் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. ஐங்கரநேசன் அவர்களின் பசுமை இயக்க எதிர்கால செயற்பாடுகள் சிறப்பாக முன்னெடுக்கப்படவேண்டும் என்று வாழ்த்துகின்றேன். மக்கள் மத்தியில் சூழல் தொடர்பான நல்ல பல கருத்துக்களை எடுத்துச் செல்வதற்கு அவரின் இவ்வியக்கம் ஒரு கருவியாக இருக்க வேண்டும் என்றும் வாழ்த்தி எனது உரையை இத்துடன் நிறைவு செய்கின்றேன். ★

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தற்போது அங்கத்துவம் வகிக்கும் பங்காளிக் கட்சித் தலைவர்கள் கூட்டம் கொழும்பில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழரசு சார்பில் கட்சின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரான கோவிந்தம் கருணாகரன்(ஜனா), ஹென்றி மகேந்திரம் ஆகியோரும், புளொட் சார்பில் அதன் முக்கியஸ்தர் இராகவனும் கலந்து கொண்டனர்.

இதன்போது நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் கூட்டமைப்புக்கு ஏற்பட்டிருக்கும் பின்னடைவுகள் குறித்தும், அதற்கான காரணங்கள் குறித்தும் அதிகம் பேசப்பட்டுள்ளது. குறிப்பாகக் கூட்டமைப்பின் ஆசனப் பங்கீட்டில் ஏற்பட்ட இழுபறி முலண்பாடுகள், ஒற்றுமையின்மை, கூட்டமைப்பின் செயற்பாடுகள் முமையாக மக்கள் மத்தியில் செல்லாமை போன்ற காரணங்களாலே இந்தப் பின்னடைவுகள் ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இத்தகைய காரணங்களால் கூட்டமைப்புக்கு 35 வீத வாக்குகளே கிடைக்கப்பெற்றிருக்கும் நிலையில் அடுத்து வரும் தேர்தல்களில் அவற்றைச் சீர்செய்து கொள்ளவேண்டுமென்றும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இவற்றையெல்லாம் செய்வதற்குக் கூட்டமைப்புக்குள்யே முழுமையானதொரு ஒற்றுமை ஏற்படவேண்டும். அவ்வாறு நாம் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட்பட்டால் எதிர்காலத்தில் பின்னடைவுகளைத் தவிர்த்துக் கொள்ள முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்து வரும் தேர்தல்களை எவ்வாறு எதிர் கொள்வதென்றும் அதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இதில் ஆராயப்பட்டுள்ளது. (ஐ-7)

## வடக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ணைப் பிரிவால் (ரி.ஐ.டி.) விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு வவுனியா ஈரப்பெரியகுளம்பாடசாலையில் மாணவர் களுக்கு சைக்கிள் வழங் கும் நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச் சர், இலங்கைத் தேசியக் கொடியை ஏற்ற மறுத்தார் என்ற குற்றச்சாட்டிலேயே பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி இந்த விசாரணை கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவின் தலைமையகத்தில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைக்கான அழைப்பாணையைப் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் யாழ். பிராந்திய அதிகாரிகள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரை நேரில்சென்று அவரது அலுவலகத்தில் வைத்து வழங்கியுள்ளனர்.

அந்த அழைப்பாணையில் எதிர்வரும் 16ஆம் திகதி விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ள போதும் அன்றைய திகதியில் அமைச்சருக்கு வேறு வேலைகள் இருப்பதால் பிறிதொரு திகதியில் தனது வாக்குமூலத்தை வழங்க முடியும் என அமைச்சர் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் விசாரணைக்கான திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (ஐ-7)

## தெற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) னர் தென்பகுதி மீனவர்களை நாங்கள் வெளி யேற்றுவோம். அவர்களை எப்படி வெளியேற்றுவது என எமக்குத் தெரியும்.

இவ்வாறு தெரிவித்தனர் வடமராட்சி கிழக்கு மீனவர்கள்.

வடமராட்சி கிழக்கில் அடாத்தாக தங்கியுள்ள தென்பகுதி மீனவர்களை வெளியேற்றக் கோரி நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இதன் பின்னர் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் மேலும் கூறுகையில் –

வடமராட்சி கிழக்கிலிருந்து தென்பகுதி மீனவர்களை வெளியேற்ற அரசியல்வாதிகளால் இயலாவிட்டால் அதனை அவர்கள் பகிரங்கமாகக் கூற வேண்டும். அவர்களால் முடியாவிட்டால் தென்பகுதி மீனவர்களை எப்படி வெளியேற்றுவதென்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள் அவர்களை வெளியேற்றுவோம். அதற்கும் விடாமல், தாங்களும் தீர்வை பெற்றுக் கொடுக்காமல் மக்களைப்போராடுங்கள் எனக் கூறினால் அரசியல்வாதிகள் எதற்காக இருக்கிறார்கள்? அவர்களால் பயன் என்ன?

தென்பகுதி மீனவர்களை வெளியேற்றுவது தொடர்பாக மத்திய கடற்றொழில் அமைச்சருடன் பேசித்தீர்வு காணப்படும் எனக் கூறப்பட்டது. அதற்கு என்ன நடந்தது? அட்டை பிடித்தல், சுருக்குவலை பயன்படுத்துதல், ட்றோலர் படகுகளைப் பயன்படுத்திக் கடற்றொழில் செய்தல் போன்ற சட்டத்திற்கு மாறான கடற்றொழில் முறைகளைத் தடை செய்யக்கோரி தனிநபர் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றில் கொண்டு வந்து அதனை நிறைவேற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பின்னர் ட்றோலர் படகுத் தொழிலை உடனடியாக தடைசெய்யவேண்டாம் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவுடன் இணைந்து கூறியதுடன், சட்ட விரோதத் தொழில்களைத் தடைசெய்யவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களிடம் எங்களுடைய கடல்வளத்தை பாதுகாக்கும்படி எப்படிக் கேட்கலாம். தென்பகுதி மீனவர்களுக்குக் கால அவகாசத்தை வழங்காமல் அவர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும். இல்லை அதனைச் செய்யத் தங்களால் இயலாது என்றால் அதனை அவர்கள் வெளிப்படையாகக் கூற வேண்டும். – என்றார். (ஐ -7)

## போலிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

கிராம அலுவலர் என்றும் சமாதான நீதிவான் என்றும் மாறுபட்ட தகவல்களை வழங்கிப் பொதுமக்களை ஏமாற்ற சந்தேகநபர் முற்பட்டுள்ளார்.

அவர் தொடர்பில் சந்தேகம் கொண்ட சிலர் அவரைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்ப டுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ -7)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பிரிவுக்குப் பணித்துள்ளது என நம்பத்தகுந்த வட்டாரத்திலிருந்து தெரியவருகிறது.

அத்துடன், 2 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்து சுருக்க முறையற்ற விசாரணையை ஆரம்பிக்குமாறும் சட்டமா திணைக்களம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் விஜயகுமார் சுலக்சன், நடராஜா கஜன் ஆகியோர் கொக்குவில் குளப்பிட்டியில் 2016ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி நள்ளிரவு பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர்.

சம்பவம் நடைபெற்ற மறுநாள் முற்பகல், யாழ்ப்பாணம் பொலிஸார் விபத்து என்ற அடிப்படையில் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் ஊடாக யாழ்ப்பாணம் நீதிவானுக்கு அறிக்கை சமர்ப்பித்தனர்.

மாணவர்களின் சடலங்கள் நள்ளிரவே பொலிஸாரால் மீட்கப்பட்டுவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன. அதனால் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்ட போக்குவரத்துப் பொலிஸார், விபத்துச் சம்பவம் என்ற வகையிலேயே நீதிவானுக்கு முதல் அறிக்கை முன்வைத்தனர்.

சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை மேற்கொண்ட நீதிவான், சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூற்று விசாரணையும் ஆராய்ந்து வழக்கை துப்பாக்கிச் சூட்டில் கொலை என்றே முன்னெடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதனடிப்படையில் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் பொலிஸ்மா அதிபர் பாரப்படுத்தினார். குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகள் உடனடியாக ஆரம்பித்து, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட 5 பொலிஸாரைக் கைது செய்தனர். அவர்கள் ஐவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சுலக்சன் துப்பாக்கிக் குண்டு பாய்ந்தும், கஜன் விபத்தாலும் கொல்லப்பட்டனர் என்று சட்ட மருத்துவ அதிகாரி மன்றுக்கு அறிக்கையிட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி, பொலிஸ் விசாரணையின் போது, பொலிஸ் நிலையத்தில் வேறுபடுத்தப்பட்டிருந்தது என்ற குற்றச்சாட்டும் எழுந்தது. எனினும் யாழ்ப்பாணம் நீதிவானின் உத்தரவில் அந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டு இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது.

எனினும் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையின் திருப்திகரமான அறிக்கை எதையுமே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றில் முன்வைக்கவில்லை. விசாரணைகளை அவர்கள் இழுத்தடிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு மன்றில் முன்வைக்கப்பட்ட போதும், விசாரணைப் பணிகள் முன்னேற்றகரமாக முனெடுக்கப்படவில்லை.

மாணவர்கள் சுலக்சன், கஜனின் குடும்பங்கள் சார்பில் பாதிக்கப்பட்டோர் நலன் சார் சட்டத்தரணிகளாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி கேசவன் சயந்தன் ஆகியோர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகி வந்தனர்.

உயிரிழந்த மாணவர்களின் பெற்றோரை மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு பொலிஸார் அழைத்தனர். அதனால் மறுநாள் கஜன் எனும் மாணவனின் தாயார் பொலிஸ் நிலையம் சென்றார். அங்கிருந்த பொலிஸ் உயர் அதிகாரி, இது தற்செயலாக நடந்த சம்பவம் இது தவறுதலாக நடந்துவிட்டது, வேண்டும் என்று செய்த ஒன்றல்ல எனப் பல விடயங்களைக் கஜனின் தாயாரிடம் தெரிவித்தார் என்று மன்றில் சமர்ப்பணம் செய்தார்.

பொலிஸ் அதிகாரியின் அழுத்தம் தொடர்பில் விசாரணை செய்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். எனினும் அது தொடர்பான விசாரணை அறிக்கையையும் குற்றப் புலனாய்வுப் பிரிவு இதுவரை நீதிமன்றில் முன்வைக்கவில்லை.

5 பொலிஸ் உத்தியோகத்தர்களும் 11 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் கடந்த செப்டெம்பர் மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் ஐவரும் பொலிஸ் சேவையில் மீளவும் இணைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான சுருக்க முறையற்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்படாத நிலையில் வழக்கு எதிர்வரும் 26ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

அன்றைய தினம் வழக்கிலுள்ள 5 சந்தேகநபர்களில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட 3 பொலிஸாரை விடுவிப்பதற்கான சட்டமா அதிபரின் அறிவுறுத்தலை குற்றப் புலனாய்வுப் பிரிவு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு அறிவிக்கும். 3 பொலிஸ் உத்தியோகத்தர்களும் வழக்கிலிருந்து நீதிமன்றால் விடுவிக்கப்படுவார்கள்.

மேலும் 2 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றப்பத்திரத்தை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தாக்கல் செய்வர். அதனையடுத்து சுருக்க முறையற்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிய வருகிறது.

மாணவர்கள் இருவரின் படுகொலைக்கு உடனடியாக நீதி வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் நடத்தினர். அது தொடர்பில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளை அழைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 3 மாதங்களுக்கு உரிய விசாரணைகளை முறிவுறுத்தி நீதி வழங்கப்படும் என மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியிருந்தார். அதனையடுத்தே மாணவர்கள் தீமது போராட்டத்தைக் கைவிட்டனர். (ஐ-7)

## தெற்கு மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பட்டுவரும் கடலட்டைத் தொழிலைத் தடை செய்ய வலியுறுத்தி நேற்றுக் கவனவீர்ப்புப் பேரணி ஒன்றையும் அவர்கள் முன்னெடுத்தனர்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் தென்னி லங்கை மீனவர்கள் சிலர், கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக அப்பகுதியில் தங்கியிருந்து கடலட்டைத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

தென்னிலங்கை மீனவர்களின் இந்தச் செயற்பாட்டைக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் நியாயப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் தென்னிலங்கை மீனவர்களால் முன்னெடுக்கப்படும் கடலட்டை பிடிக்கும் தொழிலை தடுத்து நிறுத்தி, அவர்களை அங்கிருந்து இன்று வியாழக்கிழமை வெளியேற்றுவதுடன் வடமராட்சிக் கடற்பரப்பில் கடலட்டைத் தொழிலை முற்றாகத் தடை செய்யுமாறு வலியுறுத்தியும் உள்ளூர் மீனவர்களால் நேற்றுப் பேரணி நடத்தப்பட்டது.

வடமராட்சி கிழக்குக் கடற்தொழிலாளர் சங்கம் மற்றும் கடற்தொழிலாளர் இணையம் ஆகியன இணைந்து இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

மருதங்கேணிக் கடற்கரையில் நேற்றுக் காலை இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் வரை ஊர்வலமாகச் சென்றதுடன் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், வடக்கு முதலைமைச்சர் ஆகியோருக்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மனுக்களைப் பிரதேச செயலர் கனகேஸ்வரனிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்தனர்.

இவ்விடயம் தொடர்பில் உரிய தீர்மானம் எடுக்கத் தவறும் பட்சத்தில் தமது போராட்டத்தை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

வடமாகாணசபை உறுப்பினர்கள் எம்.கே.சிவாஜிலிங்கம், சந்திரலிங்கம் சுகிர்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இந்தப் பிரச்சினை தொடர்பில் நேற்று முன்தினம் கடற்றொழில் அமைச்சரைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் உடனடியாகத் தெற்கு மீனவர்களை வடமராட்சி கிழக்கில் இருந்து வெளியேற்றுமாறு கோரினார். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் இதன்போது உறுதியளித்தார். ஆயினும் தெற்கு மீனவர்களை வெளியேற்று வதற்கான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையில் நேற்று ஆர்ப்பாட்டம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ -7)

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வேகத்தில் வீசும் என வளி மண்டலவியல் திணைக் களம் அறிவித்துள்ளது.

தென் மேற்குப் பருவமழை காலநிலை மாற்றத்தால் வடக்கிலிருந்து தெற்கு வரையான பகுதிகளில் காற்று வேகம் அதிகரித்துள்ளது எனத் திணைக் களம் சுட்டிக்காட்டியுள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கண்டி, நுவரெலியா, மாத்தளை, பதுளை, மொனராகலை, புத்தளம், குருணாகல், இரத்தினபுரி, மற்றும் கேகாலை மாவட்டங்களிலேயே காற்றின் வேகம் அதிகமாக இருக்கும் என வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# கிண்ணம் வென்றது யாழ். மத்திய கல்லூரி






யாழ்ப்பாணம், ஜூன் 07

வட மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியின் 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டத் தொடரில் யாழ். மத்திய கல்லூரி சம்பியனாகியது.

வட மாகாண கல்வி, பண்பாட்டலு வல்கள் விளையாட்டுத்துறைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ,வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் வருடாந்த விளையாட்டுப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில், 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டத் தொடர் யாழ். மத்திய கல்லூரி மேசைப் பந்தாட்ட திடலில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ். மத்திய கல்லூரியும் மோதின.

முதலாவது ஒற்றையர் போட்டியில் யாழ். மத்திய கல்லூரியின் மேசக்கை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரியின் தனுஸ் மோதினார். இதில் மேசக் 11:06, 11 :08, 11 :09 என மூன்று செட்களையும் தனுஸ் 11:08, 11:09 என இரண்டு செட்களையும் கைப்பற்ற முடிவில் மேசக் 3:2 என்ற செட் கணக்கில் வென்றார்.

இரண்டாவது ஒற்றையர் போட்டியில், யாழ். மத்திய கல்லூரியின் தட்சயனனை எதிர்த்து கொக்குவில் இந்துவின் துஸியந்தன் மோதினார். துஸியந்தன் 12:10, 11:08, 11:09 என மூன்று செட்களையும், தட்சயனன் 11 :02, 11 :06 என இரண்டு செட்களையும் கைப்பற்ற முடிவில் துஸியந்தன் 3:2 என்ற செட்கணக்கில் வென்றார்.

மூன்றாவது ஒற்றையர் போட்டியில், கொக்குவில் இந்துவின் சாய்ராமை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரியின் லவிதன் மோதினார். இதில், லவிதன், 11:08, 11:05, 14:12 என்ற நேர் செட்களில் வென்றார்.

தொடர்ந்தும், வெற்றியாளர் தொடர்பில் இழுபறி தொடர்ந்ததால், நான்காவது ·ஒற்றையர் போட்டி நடைபெற்றது. இதில், யாழ். மத்திய கல்லூரியின் மேசக்கை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரியின் துஸியந்தன் மோதினார். இதில் மேசக் 11:08, 7:11, 11:09, 11:08 என்ற செட் கணக்கில் வென்றார்.

ஐந்தாவது ஒற்றையர் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தட்சயனனை எதிர்த்து கொக்குவில் இந்துவின் தனுஸ் மோதினார். இதில் தட்சயனன் 11:08, 11:07, 12:10 என மூன்று செட்களையும் தனுஸ் 1:03, 11:07 என இரண்டு செட்களையும் கைப்பற்ற, 3:2 என்ற செட் கணக்கில் தட்சயனன் வென்றார்.

அந்தவகையில், மூன்று ஒற்றையர் ஆட்டங்களை வென்ற யாழ். மத்திய கல்லூரி அணி சம்பியனானது. இறுதிப் போட்டியின் நாயகனாக எம். மேசக் தெரிவானார்.

## பங்களாதேஷ் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது ஆப்கானிஸ்தான்



டில்லி, ஜூன் 07

கிரிக்கெட் உலகில் சிறிய அணியான ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி, முதல் முறையாக பங்களாதேஷ் அணியை வீழ்த்தி ரி-20 தொடரைக் கைப்பற்றியுள்ளது.

நேற்றுமுன்தினம் இந்தியாவில் · உள்ள ராஜீவ் காந்தி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவது ரி-20 போட்டியில் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதன் மூலம் ஆப்கானிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் இரண்டு போட்டிகளில் வென்று 2 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 134 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. அணியின் அதிகபட்ச ஓட்டமாக தமீம் இக்பால் 43 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் ரஷித் கான் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.


இதனைதொடர்ந்து 135 வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பாடிய ஆப்கானிஸ் தான் அணி 18.5 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக சமிமுல்லா வோரி 49 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் மொசாடெக் ஹொசைன் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்த ரி-20 தொடரை பொறுத்த வரை, நடைபெற்று முடிந்த இரண்டு போட்டிகளிலும், ஆப்கானிஸ்தான் அணியின் இளம் சுழற்பந்து வீச்சாள ரான ரஷித் கானே போட்டியின் ஆட்ட நாயகனாகதெரிவு செய்யப் பட்டமை குறிப்பிடத் தக்கது.

## வடக்கு நீலங்களின் 9 ஆவது சமர் நாளை கிளிநொச்சியில் ஆரம்பம்









வடக்கு நீலங்களின் சமர் கிரிக்கெட் போட்டி நாளை 8 ஆம் திகதி மற்றும் 9 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கின் ஒன்பதாவது நீலங்களின் சமர் கிரிக்கெட் போட்டி தொடர்பில் தெளிவுப்படுத்தும் ஊடக சந்திப்பு கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் மற்றும் கிளிநொச்சி இந்துக் கல்லூரிகளிற்கிடையிலான வடக்கு நீலங்களின் சமர் நாளை 8 ஆம் திகதி மற்றும் 9 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இந் நிகழ்வில் இப்போட்டியில் பங்கு கொள்ளும் வீரர்கள் அறிமுகப் படுத்தப்பட்டதுடன், இரு பாடசாலைகளிற்கு இடையிலான நட்புறவை வலுப்படுத்தும் வகையில் பாடசாலை கொடிகளை இரு பாடசாலை அதிபர்கள் மற்றும் அணித் தலைவர்கள் பரிமாற்றம் செய்து கொண்டனர்.

தொடர்ந்துவரும் நான்கு வருடங்களுக்கு அனுசரணையாளர்களாக 'மொபிட்டல்' நிறுவனம் ஒப்பந்தம் செய்து கொண்டதுடன், இவ் வருடத்திற்கான போட்டிக்கான காசோலையையும் உத்தியோக பூர்வமாக வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையிலும் கேபிளுக்கு ஆப்பு!



திருமலை, ஜூன் 07

யாழ்ப்பாணத்தைத் தொடர்ந்து திருகோணமலை நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கேபிள் ரிவி வயர்கள் மின்சாரக் கம்பங்களில் கட்டப்பட்டிருப்பின் அவற்றை ஒரு வார காலத்திற்குள் அகற்றி மாற்று ஒழுங்கைக் கையாளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நகரசபை எல்லைக்குள் உள்ள சகல கேபிள் ரிவி உரிமையாளர்களுக்கம் திருகோணமலை நகர சபை தலைவர் நா.இராஜநாயகம் நேற்றுப் புதன்கிழமை அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக எழுத்து மூலமான கடிதம் அனைத்துக் கேபிள் ரிவி உரிமையாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மின்சாரக் கம்பங்களில் கட்டப்பட்டுள்ள கேபிள் ரிவி வயர்களால் மின்சாரம் தாக்கி ஏனைய மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள உயிரிழப்புக்களைக் கருத்தில் கொண்டு முன் எச்சரிக்கை நடவடிக்கை கடந்த 30ஆம் திகதி இடம்பெற்ற சபையின் தீர்மானத்துக்கு அமைய இந்தக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இதனைக் கருத்தில் கொள்ளாத கேபிள் ரிவி உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் நகராட்சி மன்றத் தலைவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# கோண்டாவிலில் தேனீக்கிராமம்







யாழ்ப்பாணம், ஜூன் 07

தமிழ்த்தேசிய பசுமை இயக்கம் உலக சுற்றுச்சூழல் தினத்தையும், உலக தேனீக்கள் தினத்தையும் முன்னிட்டு முன்னெடுத்துள்ள தேனீக்கள் கிராமம் திட்டத்தின் தொடக்க நிகழ்ச்சி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கோண்டாவிலில் கோலாகலமாக நிகழ்ந்தது.

மகரந்தங்களைக் காவுவதன் மூலம் இயற்கைச் சூழலுக்கும், விவசாயத்துக்கும் பாரிய பங்களிப்பைச் செய்துவருகின்ற தேனீக்கள், விவசாய இரசாயனங்களினாலும் நகரமயமாக்கலினாலும் எண்ணிக்கையில் வீழ்ச்சி அடைந்து வருகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு தேனீக்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தேனீ வளர்ப்பின் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் தேனீக் கிராமம் என்ற திட்டத்தை முன்னெடுத்துள்ளது. முதலாவது கிராமமாகக் கோண்டாவில் தெரிவுசெய்யப்பட்டு, முதற்கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு தேனீப்பெட்டிகள் வழங்கப்பட்டன.

கோண்டாவில் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு தேனீப் பெட்டிகளை வழங்கினார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் வடக்கு விவசாய அமைச்சர் க.சிவநேசன் சிறப்பு விருந்தினராகவும், வைத்தியகலாநிதி சிவன்சுதன், பேராசிரியர் சோ.கிருஸ்ணராசா, சட்டத்தரணி தி.அர்ச்சுனா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

இணுவையூர் ரசிகப்பிரிய சபா கலை வளர்ச்சி மன்றத்தினரதும், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளினதும் நாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற்றன.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விரைவில் தேனீ வளர்ப்புப் பற்றிய பயிற்சிகள் வழங்கப்படும் என்றும், பயிற்சியின் பின்னர் அவர்கள் அனைவருக்கும் தேனீக்குடியிருப்புகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சமுர்த்திப் பயனாளிகள் நேற்று சாவகச்சேரியில் ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 07

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குரிய சமுர்த்தி வங்கிக் கட்டடம் அமைப்பதற்கு நகர சபை அனுமதி வழங்க வேண்டும் எனக் கோரி சாவகச்சேரி சமுர்த்திப் பயனாளிகள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2012ஆம் ஆண்டு சாவகச்சேரியில் சமுர்த்தி வங்கி அமைப்பதற்கான காணி வழங்குவது தொடர்பாக அனைத்து ஆவணங்களும் தென்மராட்சிப் பிரதேச செயலாளரால் காணித் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருந்தன.

2013ஆம் ஆண்டில் அப்போது யாழ்.மாவட்ட அரச அதிபராக இருந்த சுந்தரம் அருமைநாயகத்தால் சமுர்த்திக் கட்டடம் அமைக்குமாறு அனுமதி வழங்கப்பட்ட நிலையில், அந்தக் காணியில் கட்டடம் அமைப்பதற்காக சமுர்த்தித் திணைக்களத்தினரால் 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சமுர்த்தி வங்கிக்கு வழங்கப்பட்ட காணியில் கட்டடம் அமைப்பதற்கான நிர்மாணப் பொருள்கள் பறிக்கப்பட்டிருந்த நிலையில், கட்டட நிர்மாணப் பொருள்களைச் சாவகச்சேரி நகர சபை அபகரித்துள்ளதாக சமுர்த்தித் திணைக்களத்தினரால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அப்போதைய சாவகச்சேரி நகர சபைத் தவிசாளரால் அந்தக் காணியில் சமுர்த்தி வங்கிக் கட்டடம் அமைப்பதற்கு அனுமதி வழங்குவதாகத் தெரிவித்து அந்த வழக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து சமுர்த்தி வங்கிக்குரிய கட்டடம் அமைப்பதற்கு இதுவரை சாவகச்சேரி நகர சபை இடையூறு விளைவித்து வருவதாகத் தெரிவித்து நேற்று சாவகச்சேரியில் சமுர்த்திப் பயனாளிகளின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில், சமுர்த்திப் பயனாளிகள் சாவகச்சேரி நகர சபைக்கு எதிராகக் கோசங்களை முன்வைத்து ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி பஸ் தரிப்பிடத்தில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு சென்று பிரதேச செயலருக்கு மனுக் கையளிப்புடன் நிறைவுபெற்றது. (ஐ)

# இரு பொலிஸார் மீது கிழக்கில் வாள்வெட்டு

மட்டக்களப்பு, ஜூன் 07

மட்டக்களப்பு காத்தான்குடியில் பொலிஸார் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாக்கிழமை மாலை காத்தான்குடி 6ஆம் வட்டாரத்தில் பொலிஸாரின் அவசர சேவைக்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார் மீது வாள்வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

வாள் வீச்சில் படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வாள்வீச்சுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# திருகோணமலைக்கும் பரவியது வாள்வெட்டு

## 7 பேர் படுகாயம்!



திருகோணமலை, ஜூன் 07

திருகோணமலை உப்புவெளி, சல்லிப் பிரதேசத்தில் இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர் என உப்புவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக்குழு மோதல் வாள்வெட்டுச் சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் ஆலய உற்சவம் இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் ஆலயத்துக்குச் சென்ற திருகோணமலை நகர் பகுதியைச் சேர்ந்த குழுவினருக்கும் சல்லிப் பிரதேசத்திலுள்ள மற்றுமொரு குழுவினருக்கும் இடையே சம்பவதினம் இரவு மோதல் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் இந்த மோதலில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் 7 பேர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து 3 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இரு குழுக்களுக்கிடையே பழைய விரோதம் காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை உப்புவெளிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.06.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.